ஆரம்பம் 1969 பெப்ரவரி


அறிவோம்.. அறிவிப்போம்...


# தொண்டன்

சமய - சமூக - இலக்கிய வெளியீடு

ஜனவரி - பெப்ரவரி - மார்ச் - 2025

100/=






"குளிர்ந்த பானம்
கோடைக் காலத்தில்
எப்படி இருக்குமோ அப்படியே
உண்மையான தூதர் தம்மை
அனுப்பினவருக்கு இருப்பார்;
அவர் தம் தலைவருக்குப்
புத்துயிரளிப்பார்."

ISSN : 2012-6352 Reg.No.187317

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

அறிவோம் ... அறிவிப்போம் ...

ஆரம்பம் - 1969 பெப்ரவரி

மலர் - 55 இதழ் - 01

ஜனவரி - பெப்ரவரி - மார்ச் 2025

■ **ஆசிரியர் :**
அருட்தந்தை. அருட்கலாநிதி
பிறைனர் செலர்

■ **துணையாசிரியர் :**
திரு. பெஸ்லியோ வாஸ்

■ **நூல் வடிவமைப்பு :**
திருமதி. சுபாஜெனி சங்கர்

**வெளியீடு**

**சமூகத் தொடர்பு நிலையம்,**
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். - 44,
மட்டக்களப்பு.

**பதிப்பகம்**

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.

**SOCIAL COMMUNICATIONS CENTRE**

P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com

விலை : 100/=
ஆண்டுச் சந்தா : 1700/=
(தபாற் செலவு உட்பட)




## அன்புடன் உங்களோடு ...

**யூபிலி ஆண்டின் அர்த்தமும் அழைப்பும் (லேவி 25:8-13)**

2025ம் யூபிலி ஆண்டில், தைத்திங்கள் - மாசித்திங்கள் சஞ்சிகைக்கு பதிப்புரை எழுதுவதில் மகிழ்வடைகின்றேன். உலகத் திருஅவை தைத்திங்கள் முதல் நாளில், மரியா இறைவனின் தாய் என்று அறைகூவல் விடுத்து கொண்டாடி மகிழ்கின்றது.

திருத்தந்தை பிரான்சிஸ் 2025ம் ஆண்டை யூபிலி ஆண்டாகப் பிரகடனம் செய்துள்ளார். *"Spes Non Confundit"* (நம்பிக்கை ஏமாற்றுகிறதில்லை) என்ற கூற்றுக்கிணங்க யூபிலி ஆண்டில் கடவுள் மீது நம்பிக்கை வைத்து அவர் ஒரு பொழுதும் ஏமாற்றமாட்டார் என்ற எண்ணத்துடன் பயணிப்போம்.

வரலாற்று ரீதியாகப் பார்க்கின்ற வேளையில் யூபிலி ஆண்டைப் பற்றிய விடயங்கள் லேவியர் நூலில் உள்ளன. "ஆரோனிடம் நீ கூறவேண்டியது; அவன் சாகாது இருக்க வேண்டுமெனில், தூயகத்தில் தொங்குதிரைக்கு உள்ளே இருக்கும் இரக்கத்தின் இறக்கையின் மூடிக்கு முன்பாக, அவன் விரும்பும்போதெல்லாம் வரக் கூடாது; வந்தால் சாவுக்குள்ளாவான். ஏனெனில் இரக்கத்தின் இருக்கையின் மேல் மேகத்தில் நான் தோன்றுவேன்" (லேவி 16:2).

திருத்தந்தை 8ம் வொனிபஸ் யூபிலி பாரம்பரியத்தை கி.பி 1300ல் மீண்டும் கட்டியெழுப்பினார். அடிமைகளை விடுதலை செய்வதையும், பாவத்திலிருந்து மன்னிப்புப் பெறுவதையும் இரு பரிமாணங்களாகக் கொண்டிருந்தார்.

யூபிலி என்பது 49 ஆண்டுகள் கழிந்தபின் வரும் ஆண்டு. இது விவிலியத்தில் யூதர்கள் இஸ்ராயேல் நாட்டில் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாக மோசேக்கு கடவுளால் கொடுக்கப்பட்ட சட்டமாக நம்பப்படுகின்றது.

பழைய ஏற்பாட்டில் பழங்கால யூதர்கள் யூபிலி ஆண்டை யோபேல் ஆண்டு என்று அழைத்தனர். யோபேல் என்பது ஆட்டின் கொம்பைக் கொண்டு எழுப்பப்படும் எக்காள ஒலியைக் குறிக்கும்.

யூதர்கள் இத்தகைய ஒலியை எழுப்பியே தங்களது யூபிலி ஆண்டை எல்லாருக்கும் அறிவித்துக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

யூபிலி ஆண்டு புனிதமான ஆண்டாக அறிவிக்கப்பட்டது.

மேலும் இவ்வாண்டில் கடவுளால் நிலத்தை உரிமையாகப் பெற்ற அனைவரும் இழந்த தங்கள் நிலத்தை மீண்டும் பெற வேண்டும் என்றும் அடிமைகளாக இருப்பவர்கள் தங்கள் சுதந்திரத்தை மீண்டும் பெற்று அடிமை நிலையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்றும் மோயீசனின் சட்டம் வலியுறுத்துகின்றது. 50 ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த யூபிலி ஆண்டினை யூதர்கள் நினைவு கூர்ந்தனர்.

- தொடர்ச்சி 05ம் பக்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


| | |
|---|---|
| 1. திருநீற்றுப்புதன் | 02 |
| 2. அப்பாவின் வேஷ்டி | 04 |
| 3. விளக்கேற்றும் சுடராவோம் | 07 |
| 4. கடுகுக்கதை | 08 |
| 5. இளமையில் வறுமை | 09 |
| 6. சர் அலெக்சாண்டர் பிளெமிங் | 10 |
| 7. பார்வைகள் பலவிதம் | 11 |
| 8. ஊனம் உடலிலல்ல | 12 |
| 9. உலகச் செய்திகள் | 14 |
| 10. கல்விமுறை மாற்றங்கள் | 15 |
| 11. தொண்டனின் சில நிமிடங்கள் | 17 |
| 12. மனநலம் பாதிக்கப்பட்டவரை | 20 |
| 13. மாணவர் பக்கம் | 23 |
| 14. அரசியல் | 24 |
| 15. வினாவிடைப் போட்டி | 26 |
| 16. திருஅவைச் செய்திகள | 27 |
| 17. போட்டி முடிவுகள் | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# திருநீற்றுப்புதன்

(மார்ச் 05)

## "கடவுளோடு ஒப்புரவாவோம்"

வளர வேண்டிய செடிக்குத் தண்ணீர் அறவே ஊற்றவில்லையென்றால் அது பட்டுப் போகும். அளவுக்கு மீறி தண்ணீர் தேங்கி நின்றாலும் அதுவும் ஆபத்து. ஏனெனில் செடி அழுகிவிடும். இயல்பாக இருக்கும்போது எல்லாம் இனிமையாக இருக்கும். இயல்பு மாறும் போது எல்லாம் கசந்துவிடும்.

இயல்பாக நாம் வாழாத நேரத்தில், பிறரை இயல்பாக நோக்காத நேரத்தில் நாம் பல்வேறு மன அழுத்தத்திற்கும், வியாதிகளுக்கும் ஆளாக்கப்படுகிறோம் என்பது உளவியலாளர் கருத்து.

இயல்பாக இருக்க நம் ஆண்டவர் இயேசு அழைப்பு விடுக்கிறார். இயல்பு மாறி செயல்படுவதை வெளிவேடம் என்று அழைக்கின்றார் இயேசு. வெளிவேடம் என்பது மோசமான குணம். அது மனிதனைக் கீழான நிலைக்கு இட்டுச் செல்லும் நஞ்சு போன்றது. இயல்பாக செயல்படாத யூதர்களை, பரிசேயர்களை, வெளிவேடக்காரன் என்று அழைக்கின்றார்.

"நீங்கள் தர்மம் செய்யும் போது, இறைவேண்டல் செய்யும்போது வெளிவேடக்காரரைப்போல் இருக்க வேண்டாம்" என்கிறார் இயேசு (மத் 6:2, 5). தர்மம், இறைவேண்டல், நோன்பு ஆகிய மூன்றையும் இயல்பாக செயலில் காட்ட வேண்டும்.

யோவேல் இறைவாக்கினர் மூலமாக "நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ள வேண்டாம். உங்கள் இதயத்தைக் கிழித்துக்கொண்டு (யோவே 2:13) உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்" என்று கடவுள் அழைப்புக் கொடுக்கின்றார்.

இறுதியாக சபை உரையாளர் சொல்வது போல், (சஉ 3:1-8) ஒவ்வொன்றுக்கும் ஒரு காலமுண்டு. பிறப்பதற்கு ஒரு காலம் உண்டு; இறப்பதற்கு ஒரு காலம் உண்டு. அதேபோல நமது உறவையும், தொடர்பையும் சரி செய்து, நம்மைப் புதுப்பிக்கும் காலம்தான் இந்தத் தவக்காலம். இந்தப் புனித காலத்தில் இயல்பாக தாழ்ச்சியோடு தர்மம், இறைவேண்டல், நோன்பு போன்ற அறச் செயல்களால் நம்மையே புதுப்பித்துக் கொள்வோம்.

- எக்காளத்தின் ஒலி, நம் செவிகளைத் துளைத்துச் சென்று, நம் கவனத்தை ஈர்க்கிறது. எவ்வித நோக்கமும் இன்றி அலைந்து திரியும் நம் உள்ளங்களை விழித்தெழச் செய்வதற்கும் நம்மை, நின்று, நிதானித்து சிந்திக்கவும், வாழ்வின் அடிப்படை உண்மைகளை உணரவும், அழைப்பு விடுக்கிறது.
- திசைமாறித் திரியும் நம் வாழ்வுப் பயணத்திற்கு மீண்டும் ஒரு நோக்கத்தையும், இலக்கையும் அளிப்பது, தவக்காலம். நாம் மீண்டும் தந்தையின் இல்லத்திற்குத் திரும்புவது, இந்தப் பயணத்தின் முக்கிய இலக்காகும்.
- திருநீற்றுப் புதனன்று, நம் தலையில் பூசப்படும் சாம்பல், நம் சிந்தனைகளை நிறைப்பனவற்றைச் சுட்டிக்காட்டும் ஓர் அடையாளம். நம் வாழ்வை ஆக்கிரமிக்கும் பல விடயங்கள், இந்தச் சாம்பலைப்போல் நிலையற்றது என்பதை நாம் உணர்வதற்கு, இது ஓர் அடையாளம்.
- நம் உள்ளம் ஒரு திசைகாட்டும் கருவியாகச் செயலாற்றுகிறது. 'உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்' (மத். 6:21).
- நம் உள்ளம் விரும்பும் விடயங்களை மீள்பார்வை செய்வதற்கு, தவக்காலம் அழைப்பு விடுக்கிறது

– **திருத்தந்தை பிரான்சிஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு ...

– தொடர்ச்சி .....

**விவிலியத்தில் யூபிலி ஆண்டு:**

யூபிலி என்ற சொல் எபிரேய மொழியில் ஐம்பதாவது ஆண்டின் பிறப்பை அறிவிக்கப் பயன்படுகின்றது.

- திருவிவிலியத்தில், பாரம்பரியமெனச் சொல்லப்படும் Septuagint, Jobel என்றும் Abesis என்றும் கிரேக்க மொழியில் எடுத்துரைக்கப்படுகின்றது.
- அபேசிஸ் என்பதற்கு நிவாரணம் விடுதலை அல்லது மன்னிப்பு என்று பொருள்.
- இயேசுவின் வாழ்வில் அபேசிஸ் என்ற இந்த வார்த்தை மிகவும் முக்கியமானதாக இருந்தது.
- லூக்கா நற்செய்தியில் இயேசு இதைப் பயன்படுத்துகின்றார்.
- திருவிவிலியத்தில் உள்ள லேவியர் நூலின் படி (25:3-13) யூபிலி விழா கொண்டாட்டம் அடிமைகள் விடுவிக்கப்படுதல், கடன்கள் மன்னிக்கப்படுதல், நிலபுலன்கள் திருப்பிக் கொடுக்கப்படுதல் போன்ற வற்றை விவரிக்கின்றது.

அதாவது, Release, Reconcile and Restore எனப்படும் மூன்று 'R' களை அடையாளப்படுத்தும் வகையில் யூபிலி கொண்டாடப்பட்டு வந்தது.

மூன்று R:-

Release:- ஓய்வு: மக்கள் தங்கள் விவசாயத்திற்குப் பயன்படுத்தி வந்த நிலத்திற்கு ஓய்வு.

Reconcile:- ஒப்புரவாதல்: கடவுளோடும் ஒருவர் மற்றவரோடும் ஒப்புரவு செய்து வாழ்தல்.

Restore:- கணக்கெடுப்பு: மக்கள் கால் நடைகளின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்தல் மற்றும் நிலத்தின் அளவுகளைப் பரிசீலனை செய்தல்.

இம்மூன்றின் அடிப்படையில் யூபிலி கொண்டாடப்படவேண்டும் என்பதை திருவிவிலியம் வலியுறுத்துகின்றது.

இறைவாக்கினர் எசாயா (எசா 61: லூக் 4) "ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழங்கவும்" என்று கூறும் இறைவார்த்தைகள் புனித ஆண்டாகிய இந்த யூபிலி ஆண்டினையே குறிக்கின்றது.

இங்கு புனித ஆண்டு கடவுளின் தயவையும் கருணையையும் நினைவுகூர்ந்து அறிக்கையிடுவதை வலியுறுத்துகின்றது.

திருவிவிலியக் கண்ணோட்டத்தில், யூபிலி ஆண்டு என்பது, மக்கள் தங்களது கடந்த பழைய அடிமைத்தன வாழ்வில், தாங்கள் பெற்ற அனுபவங்களை உள்வாங்கி, அதனைக் கடந்து செல்லவும், முழுவிடுதலையை நினைத்து மகிழும் தருணமாகவும், நிகழ்காலத்தில் நடைபெறும் தருணங்களை முழுமையாக வாழ்ந்து, ஆறுதல் பெறவும், வருங்காலத்தை எதிர்கொண்டு முன்னோக்கிச் செல்லவும் அழைப்பு விடுக்கின்றது.

**வரலாற்றில் யூபிலி ஆண்டு**

வரலாற்றில் 1300ம் ஆண்டில், முதல் யூபிலி கொண்டாடப்பட்டது.

அப்போதைய திருத்தந்தையாக செயல்பட்ட Boniface XIII அவர்கள் யூபிலி கொண்டாடுவதற்கான விதிமுறைகளை வழிவகுத்தார். அதிலிருந்து ஒவ்வொரு 100 ஆண்டுகளுக்கும் யூபிலி ஆண்டைக் கொண்டாட வலியுறுத்தப்பட்டது.

- அதன்பின் திருத்தந்தை Clement XI, 1342ம் ஆண்டு விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து, 100 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றியமைக்கப்பட்டு, 50 ஆண்டுகளுக்கும் யூபிலி கொண்டாடப்படலாம் என்று ஆண்டுகள் குறைக்கப்பட்டன.
- திருத்தந்தை பிரான்சிசின் சுற்றுமடலான 'Hope Does Not Disappoint'ல் நம்பிக்கை ஏமாற்றுகிறதில்லை என்பதற்கிணங்க, நம்பிக்கையோடு, பயணித்து மகிழ்ச்சியின் சாட்சிகளாவோம்.

ஆசிரியர்

அருட்தந்தை அருட்கலாநிதி பிறான்சிஸ் செவ்வியர்

"பொறுப்புள்ளவர்கள் அமைதியாகப் பணி புரிவார்கள். பொறுப்பற்ற வீணர்கள் ஆடம்பரமாக வீண் கூச்சல் போட்டுத் திரிவார்கள்"

– ஈசாப்

"ஒருவன் தன் அறியாமையை ஒப்புக்கொள்வதுதான் அறிவுக்குரிய வழியாகும்"

– கன்ஃபூஷியஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அப்பாவின் வேஷ்டி

நன்றி: இணையம்



பிரபஞ்சன்
(ஏப்ரல் 27, 1945
- டிசம்பர் 21, 2018)

பிரபஞ்சன் பிறந்த ஊர் புதுச்சேரி. இவரது இயற்பெயர் சாரங்கபாணி வைத்தியலிங்கம். இவரது தந்தை ஒரு கள்ளுக்கடை வைத்திருந்தார். புதுச்சேரியில் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு கரந்தை கல்லூரியில் புலவர் பட்டம் பெற்றார். தஞ்சாவூரில் ஆசிரியராகத் தனது வாழ்க்கையைத் தொடங்கினார். குமுதம், ஆனந்த விகடன் மற்றும் குங்குமம் ஆகிய வார இதழ்களில் பணிபுரிந்தார். 1961ல், இவரது முதல் சிறுகதை என்ன உலகமடா பரணி என்ற இதழில் வெளியானது. இவர் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார். இதுவரை 46 புத்தகங்களுக்கும் கூடுதலாக எழுதியுள்ளார். 1995ல் இவரது வரலாற்றுப் புதினம் வானம் வசப்படும் தமிழுக்கான சாகித்திய அகாதமி விருது பெற்றது. இப்புதினம் ஆனந்தரங்கம் பிள்ளையின் காலத்தைக் களமாகக் கொண்டுள்ளது. இவரது படைப்புகள் இந்தி, தெலுங்கு, கன்னடம், ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம் மற்றும் சுவீடிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவரது நாடகமான 'முட்டை' தில்லி பல்கலைக்கழகப் பாடத்திட்டத்திலுள்ளது. இவரது சிறுகதைத் தொகுப்பான நேற்று மனிதர்கள் பல கல்லூரிகளில் பாடப்புத்தகமாக உள்ளது.

இவரது மனைவியின் பெயர் பிரமிளா ராணி. மூன்று மகன்கள் உள்ளனர். இவர் சென்னையிலும் புதுச்சேரியிலும் வசித்து வந்தார்.

**விருதுகள்**

- சாகித்திய அகாதமி விருது – வானம் வசப்படும் (1995)
- பாரதிய பாஷா பரிஷத் விருது
- தமிழக அரசின் பரிசு – நேற்று மனிதர்கள்
- தமிழக சிறந்த சிறுகதைத் தொகுப்பிற்கான பரிசு – ஒரு ஊரில் ரெண்டு மனிதர்கள்
- கோயம்புத்தூர் கஸ்தூரி ரங்கம்மாள் விருது – மகாநதி
- இலக்கியச் சிந்தனை விருது – மானுடம் வெல்லும்
- சி. பா. ஆதித்தனார் விருது – சந்தியா

அப்பாவிடம் ஒரு பட்டு வேஷ்டி இருந்தது. அப்பாவிடம் வெண்பட்டும், பொன்னிறப் பட்டு வேஷ்டிகளும் நிறைய இருந்தாலும் கூட, குழந்தைகளாகிய எங்களுக்கு அவருடைய சிவப்புப் பட்டு வேஷ்டியே அற்புதமானதாகத் தோன்றியது.

சிவப்பென்றால் சுத்தச் சிவப்பும் இல்லை. குங்கும வண்ணமும் இல்லை. செப்புப் பாத்திரத்தைப் புளிபோட்டு விளக்கிப் படிக் கல்லில் வைத்து விட்டுக் குளிப்பார்களே, அப்போது பார்த்திருக்கிறீர்களா? நீங்கள்! உதயகாலத்துச் சூரிய ரேகைகள் பட்டுத் தகதகக்குமே, அந்தச் செப்புப் பாத்திரம்– அது மாதிரியான வேஷ்டி அது.

முழுதும் செப்புக் கலரும் இல்லை. கரை பச்சை நிறம். நாலுவிரல் அகலம். கரையில் சரிகை வேலைப்பாடுகள். சரிகை வேலைப்பாடு என்ன என்கிறீர்கள்? வாத்துகள் ஒன்றன்பின் ஒன்றாய் அணிவகுத்துச் செல்கிற சித்திரம். அவை வாத்துகள் அல்ல; அன்னப் பறவைகள் என்றாள் அம்மா. நாங்கள் அன்னப் பறவைகளை நிறத்தில் பார்த்ததில்லை. அந்த வேஷ்டியின் கரையில்தான் பார்த்திருக்கிறோம். எதுவானால்தான் என்ன? உயிருள்ள ஜீவராசிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வேஷ்டி சாதாரணமாகக் கண்களில் காணக் கிடைப்பதில்லை. அப்பா, அதை அவருடைய ஆளுயர, மிக அகலமான அலமாரியில் வைத்திருப்பார். அந்த மாதிரி அலமாரிகள் எல்லாம் இப்போது கிடைப்பதில்லை. ஒற்றை ஆள் அகலம்தானே இப்போதைய அலமாரிகள். அதுவோ மூன்று அலமாரிகளை பக்கம் பக்கமாக நிறுத்தி வைத்ததுபோல் இருக்கும்.

அப்பா அலமாரியில் இருந்து, அதை எடுக்கப்போகும் நேரம் எங்களுக்குத் தெரியும்: எனக்கும் என் தங்கை ராஜேஸ்வரிக்கும். பண்டிகை, மற்றும் தாத்தாவுக்கு தெவஷம் முதலான நாட்களில்தான் அது வெளிவரும். அந்த நாட்கள்தான் எங்களுக்கு முந்தியே சொல்லப்பட்டிருக்குமே! அப்பா குளித்துவிட்டு வந்து அந்த வேஷ்டியைத்தான் எடுத்து உடுத்துவார். அப்பா எப்போது குளித்து விட்டு வருவார் என்று தவம் கிடப்போம், அலமாரிக்கு முன்னால்.

அப்பாவுக்குக் குளிக்க ஒரு மணி நேரம் அவசியப்படும். அநியாயத்துக்கு ஏன் அவர் தாமதம் பண்ணுகிறார் என்று இருக்கும். அது குழந்தைப் பருவம். கேள்விகளால் மட்டுமே ஆன பருவம். இப்போது தெரிகிறது. குளிப்பது அழுக்குப் போகவா? அழுக்குப் போகக் குளித்தது யார்? குளிப்பது ஒரு சுகம். உச்சந்தலையில் விழுந்த குளிர்ச்சி வழிந்து வழிந்து பாதத்துக்கு வருகிற இன்பத்துக்குத் தானே குளிப்பது... குளித்த பின் ஏற்படுகிற புத்துணர்ச்சிக்குத்தானே குளிப்பது? அப்பா ஒரு மணி நேரம் எடுத்துக் கொண்டது நியாயம் என்றே தோன்றுகிறது.

சரி! குளித்ததும் சட்டுப் புட்டென்று வந்து வேஷ்டியை எடுப்பார் என்றா நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை. குளித்தும், கோமணத்தோடு வாசலுக்கு வந்து நின்று விடுவார். ஈரத்தைப் பாதி தானும், மீதி சூரியனும் துடைக்க வேணும். நாங்கள் அப்பாவையே பார்த்துக் கொண்டு இருப்போம். நீர் முத்துக்கள் அவர் முதுகில் கோடு கிழித்துக் கொண்டு இறங்குவதைப் பார்க்க வியப்பாய் இருக்கும். அவர் முதுகே ஒரு பெரிய தாமரை இலையாகவும், நீர்த்துளிகள் முத்துக்களாகவும் தோணும். நிதானமாகவும், அங்குலம் அங்குலமாகவும் துடைத்து ஈரம் போக்குவார். அப்பாவின் உடம்பு சிவந்து போய்விடும். ஏற்கனவே அவர் சிவப்பு. குளித்தபின், உடம்பு பழுத்துவிட்டது மாதிரி இருக்கும்.

“மணியாகுது.. சீக்கிரம் வந்து படைச்சா என்ன?” என்பாள் அம்மா. இதைக் கோபமாகவும் குற்றச்சாட்டாகவும் சொல்வாள் என்கிறீர்களா! இல்லை! இன்னும் கொஞ்ச நேரம்தான் ஆகட்டுமே என்று அப்பாவைத் தட்டிக் கொடுப்பதுபோல் இருக்கும். கூரை எரவானத்தில் ஒரு கையை வைத்துக் குனிந்து, வாசலில் நிற்கும் அப்பாவைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு அம்மா இதைச் சொல்கையில் எங்களுக்குக் கோபம் கோபமாய் வரும்.

அப்பாடா! ஆச்சு... ஒரு வழியாகக் குளித்து முடித்துத் துவட்டிய துண்டை இடையில் கட்டிக் கொண்டு, கோமணத்தை உருவிப் பிழிந்து, பத்துத் தடவை ஈரத் தூசி பறக்க உதறி உதறி வாசலில் கட்டியிருக்கும் கொடியில் காயப் போடுவார். அது காற்றில் பறந்து விடாமல் இருக்க, முனைகள் இரண்டையும் பிடித்து முடிச்சுப் போடுவார். அப்புறம் தலைமுடியை, தலையைக் கவிழ்த்துத் தட்டித் தட்டி ஈரம் போக்குவார். தெறிக்கும் நீர்த்தூசுகள், சின்னஞ் சிறு கொசுக் கூட்டம் மாதிரி இருக்கும்.

அப்புறம் கூடத்துக்கு வருவார், அப்பா. சடாரென்று வந்தால் தேவலையே! அதுதான் இல்லை. கூடத்து மிதியடியில் காலை இப்படி அப்படிப் புரட்டிப் புரட்டி நன்கு மணல், மண்போகத் துடைப்பார். காலில் ஒரு துளி அழுக்கு இருக்காது. அழுக்கு அவரது ஜென்மப் பகை ஆச்சே! எங்களுக்குத் தெரியுமே. அப்புறம்தான் அலமாரியைத் திறப்பார், அப்பா.

அந்தக் கணம் ஓர் அபூர்வமான கணம். கதவைத் திறந்ததும், குபீரென்று பச்சைக் கற்பூர வாசனை வந்து தாக்குமே, சிலிர்க்க அடிக்குமே உடம்பை, அந்தக் கணம் அதற்காகத்தானே காத்திருக்கிறோம். இத்தனை நாழி காத்திருக்கிறோம். நாங்கள் மூக்கு, வாய் இரண்டையும், கரை மீன் திறப்பது போலத் திறந்து திறந்து மூடி அந்த வாசனையை அனுபவிப்போம். அலமாரிக்குள் ஒரு சின்ன ஜாதிக்காய் பெட்டி வைத்திருப்பார். அந்தப் பெட்டிக்குள் என்ன இருக்கும்? ஒருநாள், “அப்பா... அப்பா... அந்தப் பெட்டியை எனக்குக் காட்டுப்பா!” என்றேன். அப்பா



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சிரித்துக்கொண்டே என்னைத் தூக்கிப் பெட்டி யண்டைக் காட்டினார். ஒரு வெள்ளைத் துண்டில் சுற்றி வைக்கப்பட்ட வேஷ்டி, சுருள் சுருளாகச் சுற்றி வைக்கப்பட்ட காகிதம், (பத்திரங்கள் என்று பின் நாளில் தெரிந்து கொண்டேன்) ராணி, ராஜா படம் போட்டு நோட்டுகள், தங்கக் காசுகள், அப்பாவுடைய சிவப்புக்கல், வெள்ளைக்கல் மோதிரங்கள் எல்லாம் இருந்தன. ராஜி பொறுத்துக் கொள்வாளா என்ன? "நானும் பார்க்கணும்பா..." என்றாள். அப்பா அவளையும் பெட்டித் தரிசனம் பண்ணி வைத்தார்.

அப்பா இப்போது அந்தப் பெட்டியைத் திறந்தார். ஜாக்கிரதையாக அந்தச் சிவப்பு வேஷ்டியை எடுத்துக்கொண்டு அறைக்குள் போனார். துவைத்துக் காயப்போட்ட அண்டிராயர்கள் அப்பா அறையில், கொடியில் தொங்கும். அவை தாம் எவ்வளவு பெரியவை! ஒன்றை வெட்டி ராஜிக்கு பாவாடையும், சட்டையும் தைக்கலாம் என்று இருக்கும். அப்பா முட்டிவரை நீளும். அந்த அண்டிராயரைப் போட்டுக்கொண்டு, அதன் மேல் வேஷ்டியைக் கட்டிக் கொண்டால் தான் அப்பாவுக்கு நிற்கும்!

அப்பா வேஷ்டியைக் கட்டிகொண்டு வெளியே வருவார். அடடா... நெருப்பைச் சுற்றிக் கொண்டு வருவதுபோல் அல்லவா இருக்கும். அந்த வேஷ்டியில் தான் அப்பா எவ்வளவு அழகாகத் தெரிந்தார். அவரால் அந்த வேஷ்டிக்கு மகிமையா, அல்லது அந்த வேஷ்டியாலா? அப்பாவை அப்போது கட்டிக்கொள்ள வேண்டும் போல் இருக்கும். கட்டிக் கொள்வேன். பச்சைக் கற்பூரத்தின் வாசனையோடு, அந்தப் பட்டு சில்லென்று குளிர்ச்சியாய், பாப்பாவின் கன்னம் போல மிருதுவாய் இருக்கும். அதைத் தடவித் தடவிச் சந்தோசம் கொள்வேன்.

அந்த வேஷ்டியோடுதான் பண்டிகை மற்றும் விசேச நாட்களில், திவஷத்தின் போது அப்பா பூஜை எல்லாம் செய்வார். பூஜை என்றாலே எனக்கு நினைவில் நிற்பவை இரண்டு விஷயங்கள்தாம். ஒன்று சாப்பாடும் அன்றைக்கு சீக்கிரம் ஆகாது, தாமதம் ஆகும். வடை, பாயசம் என்று பட்டியல் நீள்வதால் அப்படி. ரெண்டாவது, அந்த நாட்களில் இனிப்புப் பட்சணங்கள் கட்டாயம் இருக்கும். தவிர சொந்தக்காரர்கள் நிறையப்பேர் வருவார்கள். மரம் ஏறிய கையோடு குடுக்கையும், வடமுமாகச் சிலர் வருவார்கள். தென்னை மரத்தைத் தேய்த்து ஏறிய காரணமாகவும், கள்ளுக்குப் பானை சீவியதன் காரணமாகவும், அவர்கள் மேல் கள்நெடி அடிக்கும். கள் வாசனை, பூவைப் போலவே நல்ல வாசனைதான். சாப்பிட உட்காரு வதற்காகக் குடுக்கையைச் சுவர் ஓரம் சாய்த்து வைப்பார்கள். அதில் உள்ள அரிவாளின் பள பளப்பு என்னைக் கவர்ந்த ஒன்று. அதைக் கையில் எடுத்துப் பார்க்கும் தைரியம்தான் இன்று வரை ஏற்படவில்லை. அந்த அரிவாளின் கூர்மையும் பட்டின் பளபளப்பும் சமம்.

– தொடரும்....




அமெரிக்க அரசின் சர்வதேச வளர்ச்சி முகாமை யின் (USAID) எதிர்காலம் கேள்விக்குறியாகியுள் ளது. இதன் ஊழியர்கள் வெளியேற்றப்பட்டு, இந்த அமைப்பை அமெரிக்க அரசின் வெளியுறவு அமைச்சகத்துடன் இணைக்க டிரம்ப் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் அவரது முதன்மை ஆலோசகர்களில் ஒருவரான தொழிலதிபர் ஈலோன் மஸ்க் ஆகியோர் இந்த முகாமை மீதான கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

இந்த முகாமையை மூடுவது உலகெங்கிலும் செயல்பட்டு வரும் மனிதாபிமான திட்டங்களில் பாதிப்பை ஏற்படுத்தும் என கணிக்கப்படுகிறது.

BBC NEWS தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டெனிஸ்டன்

# விளக்கேற்றும் சுடராவோம்!

மின்னல் கடிவாள குதிரை பூட்டியதோ காலம்
மிரண்டு போகும் வேகமாய் சுழல்வதோ நேரம்
கொரோணா போயொழிந்தது போனவாரம் போலவுண்டு
புதினம் பார் அதுவும் நடந்தேறி நாலாண்டாய்ப்போனது

மறைந்தாண்டில் புதுமையென மனதில் நிற்க
கண்டதென்ன புதிதாய்
அரசையாண்டவன் மாறினான்
அரசியலாசன உரிமைகள் மாறின
ஆண்டிறுதியிலோர் அனர்த்தம் ஆகாய அழுகையாய்
அத்தனையோடும் விடைபெற்றுக் கொண்டது

விடியல்கள் துளிர்க்குமென
புதுவருடம் தனை நம்புகிறோம்
வயதொன்றை உதிர்த்து போகுமந்த
கசந்த உண்மைதனை கண் காண மறுத்திடும்

வா புத்தாண்டே வந்து விடு நீ
தினசரி கிழியும் தினத்தாளிலல்ல...
ஊதியத்தேதி பார்க்குமொருவன்
கூலிவரும் நாளதாய் அல்ல ......
ஆண்டுமுடிய அன்னைநாடேறி
விடுமுறையிலே வீடேற தவிக்கும்
வெளிநாட்டுறவுகளுக்காயல்ல...
சிறைக்கம்பிகளை எண்ணி காத்திருக்கும்
கைதிகளுக்காய் அல்ல....

நீ வந்ததாக இருக்க வேண்டும் ...
சரணடைந்து போனவன் சடலம் காணாது
தவிக்குமொரு தாய்க்கு திரும்பிவந்த மகனாக..
அங்கவீனர்களாக்கப்பட்ட உறவுகளுக்கு
முளைத்த அவயவங்களாக....
வற்றிய பணப்பைகளில் வசந்தப்பூவாக....
முற்றிய பைத்தியங்கள் பலரின் வைத்தியமாக...
ஒட்டுமொத்தத்தில் உலகு தேடும் மெசியாவாக....

பொய்யான ஞாலம் தன்னில்
மெய்யான மெய்ஞான உறவுகள்
காண்பதரிதாகி போனதிங்கே..
விடியலென்பார், விளம்பரப்படுத்துவார்,
வித்தைகள் பல காட்டுவார்..
எத்தனை சோடனை தனை எப்படி போட்டாலும்...
பரமன் ஆடுவான் பரமபதம்,
பாம்பெது ஏணியெது
பலருக்கு தெரியாது போகும் ....
பயந்து கொள்வீர் படைத்தவனுக்கு....
பரமனருளும் புத்தாண்டு பலருக்கு
விடியலாவது விடியாமல் போவதும்
பார்வாழும் புவிப்பிறந்தோர் எம் கைகளிலே....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிறுகதை - 138




அண்மைக்காலமாக, இலவச தினக்குறிப்பேடுகளை அரசாங்க தனியார் நிறுவனங்கள் வெளியிடுவதனை நிறுத்திவிட்டன. இதனால் சராசரி நடுத்தர வர்க்கத்தினருக்கு "டயறிகள்" கிடைப்பதில்லை. அன்ரனும் விதிவிலக்கல்ல: முன்பெல்லாம் டயறி எழுதி வருபவர் அவர். இலங்கைப் படையினரின் சோதனைக் கெடுபிடிகள், இந்திய அமைதிகாக்கும் படையினரின் சோதனைகள் என்பவற்றின்போது டயறிகளை எடுத்து வாசிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

ஒருமுறை அன்ரன், வீட்டில் இடம்பெற்ற செபக்கூட்டம் பற்றி எழுதியிருந்தார். "இன்று பிற்பகல் 4.30 தொடக்கம் 6.00 மணிவரை வீட்டில் செபக்கூட்டம் இடம்பெற்றது. இருபதுபேர் பங்குபற்றினர்". இதை வாசித்த அயல்நாட்டுப் படையினர், "இது என்ன கூட்டம்? அந்த இயக்கமா....? இந்த இயக்கமா...? அல்லது புது இயக்கமா....?" என்று துளைக்கத் தொடங்கிவிட்டனர். கடைசியில், கிறிஸ்தவ தமிழ்ப்படைவீரன் ஒருவன் ஹிந்தியில் அதிகாரிகளிடம் விளக்கிய பின்னர்தான் அன்ரன் விடுவிக்கப்பட்டார்.

அன்றிலிருந்து டயரியில் மனதைக் கொட்டி எழுதுவதில்லை. முக்கிய உத்தியோகக் குறிப்புகளை மட்டும் எழுதி வைத்தார்.

2025 யூபிலி ஆண்டில் இருந்து சரி மீண்டும் டயறி எழுதவேண்டும் என்று விரும்பினார். ஆனால் டயறிதான் கிடைப்பதில்லையே!

விக்கிரமாதித்தன் கதையில் வரும் வேதாளம் போல் மனம் தளராமல் அன்ரன் செயற்பட்டார். 160 பக்க அப்பியாசக் கொப்பியொன்றை வாங்கினார். ஒவ்வொருநாளும் அன்றன்றைய திகதியைப் போட்டு எழுதுவது என்று முடிவு செய்தார். அப்பாவின் கூட்டாளி கறுப்பையா மாமா சொல்வது ஞாபகத்திற்கு வந்தது:

"வல்லவனுக்கு பில்லும் ஆயுதம்". அவருக்குப் புல் என்று சொல்லத்தெரியாது. .

## சூரியனுக்கு மிக அருகில் சென்ற பார்க்கர் விண்கலம்...



சூரியனிடம் இதுவரை இல்லாத அளவிற்கு மிக நெருக்கமாக சென்று, அதனை வெற்றிகரமாக கடந்து, நாசாவின் பார்க்கர் விண்கலம் சாதனை படைத்துள்ளது.

2018 ஆம் ஆண்டு சூரியனின் வெளிப்புறப் பகுதியை ஆய்வு செய்வதற்காக அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு மையமான நாசா, பார்க்கர் என்ற விண்கலத்தை ஏவியது. இது, 21 முறை சூரியனை நெருங்கி சுற்றி வந்தாலும், கடந்த கிறிஸ்துமஸ் அன்று, இதுவரை இல்லாத அளவிற்கு பூமியில் இருந்து 61 லட்சம் கிலோ மீட்டர் தொலைவிற்கு சென்று சூரியனை நெருங்கியது. அதாவது, பூமியையும் சூரியனையும் 100 சென்டி மீட்டர் இடைவெளியில் வைத்தால், பார்க்கர் விண்கலம், சூரியனிடம் 4 சென்டி மீட்டர் தொலைவு வரை நெருங்கியதாகப் புரிந்துகொள்ளலாம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

NEWS 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளமையில் வறுமை

இளமையில் வறுமை பொல்லா
இருளெனச் சொன்னாள் ஔவை.
குளந்தனில் கமல மொட்டாம்
குமிழது மலருங்காலை
வளமது குன்றி வற்றி
வறண்டிடில் கொடுமை அன்றோ?
இளமையில் வறுமை சூழின்
ஏது சுகம்? எல்லாம் பாழே!

மனிதனின் வாழ்வுப் பாங்கில்
மறந்திடாப் பருவ மிந்த
இனிமை சேர் இளமை யாகும்.
இதற்கெது இணையதாகும்?
புனிதமார் உணர்வு நெஞ்சில்
பூத்திடும் பருவந் தன்னில்
கனலெனும் வறுமை கூடின்
கனவெது சுவைப்பும் சொல்வீர்?

கல்வி பாழ், கலைகள் பாழே!
கருத்தினில் உதித்து நிற்கும்
நல்லற நோக்கம் பாழே
நாடிய உறவும் பாழே
தொல்லைகள் சூழ வையச்
சுவையெலாம் கசந்து போகும்,
எல்லை யில்லாத துன்பம்
இளமையில் வறுமையன்றோ!



அருட்பாவலர் நிலா தமிழின்தாசன்

## உலக பிரெய்லி தினம்...!




ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி யன்று உலக பிரெய்லி நாள் (World Braille Day) பன்னாட்டு அளவில் அனுசரிக்கப்படுகிறது. பார்வையற்றோர் மற்றும் பார்வை குறைபாடு உடையோர் ஆகியவர்கள் மனித உரிமைகளை முழுமையாக உணர்ந்து கொள்ள உதவும் தகவல் தொடர்பு சாதனமான பிரெய்லியின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை இந்நாள் கொண்டாடுகிறது. இந்நிகழ்விற்கான திகதி 2018 ஆம் ஆண்டு ஒரு பிரகடனத்தின் மூலம் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் தேர்ந்தெடுக்கப்பட்டது. பிரெய்லி எழுத்து முறையை உருவாக்கிய இலூயிசு பிரெய்லின் பிறந்த நாளையும் இது குறிக்கிறது. முதல் உலக பிரெய்லி தினம் 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆம் திகதியன்று கொண்டாடப்பட்டது.

“ அனைவரையும் நேசி: சிலரை மட்டும் நம்பு. ஒருவரைப் பின்பற்று. ஆனால் ஒவ்வொருவரிடம் இருந்தும் கற்றுக்கொள்...! ” - லெனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேர் அலெக்ஸாண்டர் பிளெமிங்
## - Sir Alexander Fleing
(ஆகஸ்ட் 6, 1881 – மார்ச் 11, 1955)

ஃப்ளெமிங் 1881 ஆகஸ்ட் 6 அன்று ஸ்காட்லாந்து நாட்டில் பிறந்தவர். அவரது இளமைக்கல்வி இயற்கையெழில் சூழ்ந்த மலைப்பகுதியில் அமைந்தது. அங்குதான் இயற்கையை இரசிக்கவும், எதையும் கூர்ந்து நோக்கி அறியவும் அவர் பயிற்சி பெற்றார். பின்னாளில் அவர் பெனிஸிலின் என்ற அற்புத மருந்தைக் கண்டுபிடிக்க இப்பயிற்சியே உதவி செய்தது.

தொழில்நுட்பக் கல்லூரி படிப்பை முடித்தபிறகு 16 வயதிலேயே கப்பல் நிறுவனம் ஒன்றில் அவர் அலுவலராகச் சேர்ந்தார். எழுத்தர் பணி அவருக்கு மனநிறைவை அளிக்கவில்லை. தூரத்து உறவினர் ஒருவரிடமிருந்து கிடைத்த சொத்து, அவர் மிகத் தாமதமாக தனது 20 வயதில் மருத்துவக் கல்லூரியில் சேர வழி செய்தது.

படிப்பை முடித்த பிறகு, நோய்க்கிருமிகளுக் கெதிரான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ஆல்ம்நாத் ரைட் என்பவரிடம் உதவியாளராகச் சேர்ந்தார் ஃப்ளெமிங். ஜெர்மன் விஞ்ஞானி பால் என்ரிக் என்பவர் 'சிஃபிலிஸ்' என்ற கொடிய பால்வினை நோய்க்கு 'ஸல்வார் ஸன்' என்ற மருந்தைக் கண்டுபிடித்திருந்தார். இரத்தத்தைப் பரிசோதித்து அந்த நோயை எளிதில் கண்டறியும் ஒரு மேம்பட்ட முறையை ஃப்ளெமிங் அறிமுகப்படுத்தினார்.

நான்கு ஆண்டுகள் நடந்த முதல் உலகப்போரில் ரைட் குழுவினரின் தடுப் பூசி மட்டும் பயன்படுத்தப்பட்டிராவிட்டால், ஆயிரக்கணக்கானோர் டைஃபாய்டு காய்ச்ச லுக்குப் பலியாகியிருப்பார்கள். போரில் காய மடைந்த வீரர்களுக்கு கார்பாலிக் அமிலம், போரிக் அமிலம், ஹைட்ரஜன் பெராக் ஸைட் போன்ற நச்சுமுறி மருந்துகளையே அக்காலத்தில் பயன்படுத்தி வந்தனர்.

இந்த மருந்துகள் சிகிச்சைக்கு உதவாததோடு, இரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்களை அழித்து மேலும் பலர் இறப்பதற்கே வழிவகுத்தன என்று ஃப்ளெமிங்க் நிரூபித்தார். குறைபாடற்ற நச்சுமுறி மருந்தைக் கண்டுபிடிப்பதில் அவர் கவனம் திரும்பியது.

பல்வேறு வகை நுண்ணுயிர்களை தட்டுகளில் வளர்த்து அவற்றின் இயக்கங்களை அவர் ஆராயத் தொடங்கினார். தனது மூக்கிலிருந்து ஒழுகிய நீரிலிருந்தே ஓரிரு சொட்டுகள் எடுத்து பாக்டீரியாக்கள் அடங்கிய தட்டில் வைத்து வளர்த்தபோது, சளித்திரவத்தைச் சுற்றியிருந்த பாக்டீரியாக்கள் மட்டும் அழிக்கப்பட்டிருந்ததைப் பார்த்தார். இதேபோல் கண்ணீர், உமிழ் நீர், சீழ் போன்ற உடலில் சுரக்கும் பல திரவங்களை எடுத்து ஆராய்ச்சிக்கு உட்படுத்தினார். இந்த திரவங்கள் அனைத்திற்கும் நோய்க்கிருமிகளை வளராது தடுக்கும் ஆற்றல் இருப்பதைக் கண்டார். இயற்கையிலேயே அமைந்த இந்த நச்சு முறிபொருளுக்கு 'லைசோசைம்' எனப் பெயரிட்டார்.

1928ஆம் ஆண்டில் நுண்ணுயிர்கள் வளர்க்கப்பட்ட ஒரு தட்டை நோக்கிய போது, லைசோசைம் அதுவரை செய்திராத ஒரு செயலை காளான் செய்திருந்ததைத் தற்செயலாகக் கண்டார். கொப்புளங்கள், கட்டிகள், மூக்கு, தொண்டை, தோல் இவற்றில் ஏற்படும் தொற்றுநோய்களை வரவழைக்கும் ஸ்டாபைலொகாக்கி எனப்படும் கிருமிகளை காளான் அழித்திருந்தது. அது மட்டுமல்ல, அந்தக் காளானின் சாரம் வெள்ளை அணுக்களை அழிக்கவில்லை என்றும், வேறு திசுக்களைப் பாதிக்கவில்லை என்றும் சோதித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துத் தெரிந்துகொண்டார். காளானில் பரவிய அப்பொருளுக்கு 'பெனிசிலின்' எனப் பெயரிட்டார் ∴ப்ளெமிங். ஆனால் பெனிசிலினைப் பெரிய அளவில் அப்போது உற்பத்தி செய்ய இயலவில்லை. ஹோவர்டு ∴ப்ளோரே, எர்னஸ்ட் செயின் ஆகியோர் அடங்கிய ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகக் குழுவினர் 14 ஆண்டுகள் கழித்து அதைச் சாதித்தனர். பெனிசிலின் ஒவ்வாமை உடையவர்களுக்கு வேறு பாதுகாப்பான நச்சுக்கொல்லி மருந்துகளைக் கண்டுபிடிப்பதிலும் அக்குழுவினர் வெற்றியடைந்தனர்.

* *1945ஆம் ஆண்டில் அலெக்ஸாண்டர் ∴ப்ளெமிங், ஹோவர்டு ∴ப்ளோரே, எர்னஸ்ட் செயின் ஆகிய மூவருக்கும் மருத்துவம் அல்லது உடலியங்கியலுக்கான நோபெல் பரிசு வழங்கப்பட்டது.*
* *ஆறாம் ஜோர்ஜ் மன்னரால் 1944 ஆம் ஆண்டில் நைட் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.*
* *1999 ஆம் ஆண்டில் டைம் சஞ்சிகையால் வெளியிடப்பட்ட இருபதாம் நூற்றாண்டின் மிக முக்கியமான 100 நபர்களின் பட்டியலில் அலெக்சாண்டர் பிளெமிங்கும் உள்ளடக்கப்பட்டார்.*
* *2000 ஆம் ஆண்டு நிறைவுறும் தறுவாயில் சுவீடனிலிருந்து வெளிவரும் பிரசித்திபெற்ற மூன்று சஞ்சிகைகள் பென்சிலினை கடந்த ஆயிரமாண்டு காலத்தின் சிறந்த கண்டுபிடிப்பாக அறிவித்தன.*
* *2002 ஆம் ஆண்டில் பிபிசியால் மக்களின் வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரித்தானியாவின் முக்கியமான 100 நபர்களின் பட்டியலில் அலெக்சாண்டர் பிளெமிங்கும் உள்ளடக்கப்பட்டார்.*
* *அலெக்சாண்டர் பிளெமிங்கின் ஞாபகார்த்தமாக சிறுகோள் படையிலுள்ள ஒரு சிறுகோளுக்கு 91006 பிளெமிங் எனப் பெயரிடப்பட்டது.*




Mary Rita Schilke Korzan என்ற எழுத்தாளர், தன் அன்னைக்கு நன்றி கூறும் வகையில் 2004ம் ஆண்டு நூலொன்றை வெளியிட்டார். தன் குழந்தைப் பருவத்தில் அன்னை தன்மீது உருவாக்கிய தாக்கத்தைப்பற்றி அந்நூலில் ஒரு கவிதை வடித்துள்ளார். அந்தக் கவிதையின் தலைப்பு "When You thought I wasn't Looking" "நான் பார்க்கவில்லை என்று நீ நினைத்தபோது" பல்லாயிரம் உள்ளங்களைக் கவர்ந்த இந்தக் கவிதையின் தமிழாக்கம் இது.

நான் பார்க்கவில்லை என்று நீ நினைத்தபோது,
நான் வரைந்த படம் ஒன்றை
குளிர்சாதனப் பெட்டியின் கதவில் ஒட்டி வைத்தாய்.
அடுத்த படத்தை வரையும் ஆசை எனக்கு
ஏற்பட்டது.
நான் பார்க்கவில்லை என்று நீ நினைத்தபோது
தெருவில் போன பூனைக்குட்டிக்கு உணவளித்தாய்.
மிருகங்களிடம் அன்பாக இருப்பது நல்லதெனக்
கற்றுக்கொண்டேன்.
நான் பார்க்கவில்லை என்று நீ நினைத்தபோது
எனக்குப்பிடித்த கேக் செய்தாய்.
சின்னச்சின்ன விடயங்கள் போதும்
அன்பை வெளிப்படுத்த என்பதைத் தெரிந்து
கொண்டேன்.
நான் பார்க்கவில்லை என்று நீ நினைத்தபோது
நீ செபம் சொன்னாய். கடவுள் இருக்கிறார்,
அவரிடம் எந்நேரமும் பேசலாம் என்பதை நம்பினேன்.
நான் பார்க்கவில்லை என்று நீ நினைத்தபோது,
நீ கண்ணீர் வடித்தாய்.
துன்பமும், கண்ணீரும் வாழ்வில் வருவது இயல்பு
என்பதைப் புரிந்து கொண்டேன்.
நான் பார்க்கவில்லை என்று நீ நினைத்தபோது,
நான் பார்த்துக்கொண்டிருந்தேன்.
நான் பார்க்கவில்லை என்று நீ நினைத்துக்கொண்டு நீ
செய்த அனைத்திற்கும் நன்றி அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





– ந. பார்த்தீபன் –
ஓய்வுநிலை உப பீடாதிபதி
வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி.

# ஊனம்
## உடலிலல்ல...

"பிள்ளை ருக்சியா... பிடிவாதமாக நிற்காதே... உனக்குப் பிறகும் ரெண்டு பொம்பிளைகள் படிக்கிற வயசில ஒரு தம்பியும் இருக்கினம் எண்டதை யோசிச்சுப் பார்..." என்று சுமதி ரீச்சர் சொல்கிறார்.

சுமதி ரீச்சர் ருக்சியாவின் கடவுள்களுள் ஒருவர். 'நான் இனிப் படிக்கப் போக மாட்டன். எனக்குப் படிப்புச் சரிவராதாம்...' எல்லா ரீச்சேஸும் அதிபரிடம் சொன்னது ருக்சியாவுக்கும் கேட்டது. கேட்க வேண்டும் என்று தானே அவர்களும் சொன்னவை... 'அதனாலை நான் இனிப் பாடசாலைக்குப் போக மாட்டேன் ...' என்று ருக்சியா சொல்லி அடம்பிடித்த போது, தாய் அன்னம்மா உடைந்து போனாள்.

உவள் ஆம்பிளைப் பிள்ளையாய்ப் பிறக்க வேண்டியவள். தகப்பனைப் போல பிடிவாதமும் ஒர்மமும் கொண்டவள். தோற்றமும் அப்படியே. நிறமும் உயரமும் முகவெட்டும் கதை பேச்சும்.....

ஆம்பிளைப் பிள்ளை தகப்பனைப் போல இருந்தா, தலை நிமிர தகப்பனுக்கு கூடாது என்பார்கள். இவள் பொம்பிளைப் பிள்ளைதானே என்று நிம்மதியாக இருக்க... இடியேறு விழுந்த செய்தி வந்து அன்னத்தை உடைத்துப் போட்டது.

சைக்கிளில் விறகுக் கட்டுடன் வந்தவனை, சைக்கிள்காரன் இடிச்சு விழுத்திப் போட்டு, அவங்கடை வசதி, வாய்ப்பை பயன்படுத்தி, குடிச்சிட்டு வந்ததாக குற்றஞ்சாட்டி செத்த வீட்டுச் செலவு காசும் தராமல் ஏமாத்திப் போட்டாங்க.

உறவுகளும் அயலும் வந்து ஆறுதல் கூறி அன்னம்மா பிள்ளைகளுக்காக உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ்கிறாள்.

இப்போது ருக்சியாவும் வீட்டில் நிற்பது அவளுக்கு அவ்வளவு உசிதமாகத் தெரியவில்லை. அயலிலுள்ள சுமதியிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் சங்கடத்தைச் சொல்லி அழுதபொழுது, சுமதி தான் கற்பிக்கும் பாடசாலைக்கு ருக்சியாவைக் கூட்டிச் சென்று...

இன்று தான் ஓ.எல். வரை படித்ததே பெரிய விசயமாகவும் என்னாலும் முடியுமென்ற தன்னம்பிக்கை வந்ததும்... இப்போது தாய் சுமதி ரீச்சர் சொன்னால் தான் மறுக்க மாட்டேன் என்பதற்காக தூது அனுப்பியதையும்... சுமதி ரீச்சர் விழுந்த பாட்டுக்குக் குறி சுட மாட்டார். தனக்குப் பாதகமாக ஒரு காலமும் முடிவெடுக்க மாட்டார் என்பது ருக்சியாவுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. தன் பிள்ளை போல நினைத்துத்தான் ரீச்சர் கதைப்பார். தாய்க்கு நிகரானவர்....

ருக்சியா சம்மதித்து இரண்டு வருட காலமாகிறது. இப்ப போலிருக்கு... ஒரு பிள்ளையுடன் இன்னும் ஒரு மாத காலத்தில் அடுத்த பிள்ளைக்கும் தாயாக ருக்சியா தயாராகி விட்டாள்.

என்ன, திருமணம் செய்வதற்கு முன் ருக்சியா தனக்குப் பேசிய மாப்பிளையைப் பார்க்கவில்லை. ஆனால் என்ன அவன் காலில் சிறு ஊனம் இருக்கிறது என்று நண்பி ஒருத்தி சொன்னதால்... திருமணமே தனக்கு இப்போது வேண்டாம் என அடம்பிடித்தாள்.

ஆனால், பொடியன் நல்ல பிரயாசையானவன். தனது குடும்பத்தை சீரும் சிறப்புமாகப் பேணுறான். வீட்டோடு கடையொன்று போட்டு உழைக்கிறான். இப்போதையப் பொடியளைப் போல வம்பு தும்புப் பழக்கங்கள் எதுவும் இல்லாதவன். குறிப்பாக சீதனம் ஒன்றும் வேண்டாம் என்று கூறுகிறான் என்பதே அன்னம்மா இன்றிருக்கும் நிலைமையில் பெரிய சுவீப்பாக, வரமாக இருந்தது.

ஆனால் ருக்சியாவுக்கு அது வரமில்லை... சாபமாகத் தெரிந்தது. அதனால் அவள் பிடிவாதமாக நின்று மறுக்க,

சுமதி ரீச்சர் அன்னம்மாவின் எண்ணத்தை, அந்தக் குடும்ப நிலையைத் தெரிந்து கொண்டவள் ஆகையால் ஏற்றுக்கொண்டு ருக்சியாவுக்குப் புத்தி சொல்லி எல்லாம் நல்லபடியாக நிறைவேறி விட்டது.

இன்று பிரபலமான வீதியொன்றில் பெரிய பழக்கடை. முதலில் சிறிய மரக்கறிக் கடையாகத் தொடங்கி பின் பழங்களும் சேர்த்து விற்று, பிறகு சீசனிற்கு ஏற்ப பனங் கிழங்கு, சோளம், கச்சான்... என்பனவும் அவித்து விற்று எப்போது பார்த்தாலும் அவன் கடையில் கூட்டந்தான்.

'பானை பிடிக்கிறவள் பாக்கியசாலி' என்று இன்று பலரும் பேசுமளவுக்கு ருக்சியா வசதியும் வாய்ப்பும் கொண்டவளாக மாறிவிட்டாள்.

ஊனம் என்பது உடலில் இல்லை என்பதைப் புரிந்து கொண்ட ருக்சியா பிள்ளைகளின் பராமரிப்பை அன்னம்மாவிடம் விட்டு தானும் கணவனோடு இணைந்து கொண்டாள்.

கணவன் கஸ்ரமேசோடு கதைக்கும் பாணியைக் பின்பற்றி தானும் கதைக்கப் பழகி விட்டாள்.

கணவன் ஒரு சிறிய லொறி எடுத்து தம்புள்ளை போய் மரக்கறி வாங்கி, தோட்டங்களுக்கும் சென்று பழங்கள் வாங்கி, சோளம், கிழங்கு, கச்சான் வாங்கி வரச் சென்றால் அவள் உதவியாளர்களின் துணையுடன் கடையை நடத்தும் ஆற்றலை வளர்த்துக் கொண்டாள்.

சில வேளைகளில் அவளின் தம்பியையும் கடையில் காணமுடியும்.

இன்று ருச்சியா மட்டுமல்ல அன்னம்மா குடும்பமும் செல்வச் செழிப்பாக வாழ்கிறார்கள்.

இப்போதெல்லாம் அவள் சுமதி ரீச்சரை அடிக்கடி நினைத்துக் கொள்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகச் செய்திகள்!

## தலைகீழாகக் கவிழ்ந்த விமானம்

கனடாவில் உள்ள டொராண்டோ பியர்சன் விமான நிலையத்தில், பெப்ரவரி மாதம் 18ம் திகதியன்று விமானம் ஒன்று தரையிறங்கும்போது கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் பயணித்த பயணிகள், விமானப் பணியாளர்கள் என அனைவரும் உயிருடன் இருப்பதாக விமான நிலையத்தின் தலைமை அதிகாரி தெரிவித்தார்.

"பயணிகள் சிறிய காயங்களுடன் உயிர் தப்பித்தனர்." என்று கிரேட்டர் டொராண்டோ விமான நிலையத்தின் தலைமை அதிகாரி டேபோரா பிலிண்ட் தெரிவித்தார். அவசரகால சேவைகளின்படி, ஒரு குழந்தையும் இரண்டு பெரியவர்களும் இந்த விபத்தில் தீவிரமான காயம் அடைந்துள்ளனர். விபத்துக்குள்ளான விமானம் டெல்டா ஏர் லைன்ஸ் 4819, அதன் துணை நிறுவனமான எண்டேவர் ஏர் நிறுவனத்தால் இயக்கப்பட்டதாக அமெரிக்க ஃபெடரல் விமானப் போக்கு வரத்து நிர்வாகம் தெரிவித்துள்ளது. பயணித்தவர்களில் 22 பேர் கனடாவைச் சேர்ந்தவர்கள் என்றும் மற்றவர்கள் சர்வதேச பயணிகள் என்றும் பிலிண்ட் தெரிவித்தார்.

டொராண்டோ பியர்சன் விமான நிலையம் கடந்த சில தினங்களாக வானிலை காரணமாக விமான தாமதங்களைச் சந்தித்து வருகிறது. பிபிசியின் அமெரிக்க செய்தி கூட்டு நிறுவனமான சிபிஎஸ், விமானம் தரையிறங்கிய போது பனிப் பொழிவு குறைந்து காணப்பட்டதாக தெரிவித்தது. ஏற்கனவே வாஷிங்டன் டிசியில் பயணிகள் விமானமும் ராணுவ விமானமும் மோதி விபத்துக்குள்ளானதில் 67 பேர் இறந்தநிலையில் கடந்த ஒரு மாதத்தில் வான் வழி விபத்துகள் வட அமெரிக்காவில் நான்காக உயர்ந்துள்ளது.

## இந்தியர்களை அனுப்பிய அமெரிக்கா

அமெரிக்காவில் சட்டவிரோதமாக ஆவணங்களின்றி தங்கியிருந்ததாக, இந்தியாவைச் சேர்ந்த 112 நபர்கள் மூன்றாம் கட்டமாக பெப்ரவரி 16ம் திகதியன்று திருப்பி அனுப்பப்பட்டனர்.

பஞ்சாபின் அமிர்தசரஸ் விமான நிலையத்தில் இந்த விமானம் தரையிறங்கியது. 16ம் திகதியன்று இரண்டாம் கட்டமாக 119 நபர்கள் இந்தியா திருப்பி அனுப்பப்பட்டனர்.

முதற்கட்டமாக பெப்ரவரி 5ம் திகதி 104 நபர்கள் திரும்பி அனுப்பப்பட்டனர். இந்தியர்கள் கைவிலங்கிட்டு அனுப்பப்பட் டதை எதிர்க்கட்சிகள் விமர்சித்தனர்.

*- பிபிசிக்காக கலெக்டிவ் நியூஸ்ரூம் வெளியீடு*

## கத்தார் அரச குடும்பத்தின் சொத்து மதிப்பு

எண்ணெய் வளமும் இயற்கை எரிவாயுவும் அதிகளவில் உள்ள நாடாக கத்தார் இருக்கிறது. இதனால் உலகின் மிகவும் பணக்கார நாடுகளில் ஒன்றாக கத்தார் இருக்கிறது.

கத்தாரை இப்போது அல்-தானி குடும்பம்தான் ஆட்சி செய்து வருகிறது. கடந்த 200 ஆண்டுகளாகவே இவர்கள் குடும்பத்தின் கட்டுப்பாட்டில் தான் கத்தார் இருக்கிறது என்பதால் இவர்களுக்குக் கணக்கிடவே முடியாத அளவுக்குச் செல்வம் குவிந்துள்ளது. ஷேக் தமீம் பின் ஹமத் அல்-தானி தனது தந்தை ஷேக் ஹமத் பின் கலீ:ஃபா அல்-தானிக்கு பிறகு 2013இல் கத்தாரின் அமீராகப் பதவியேற்றார். கத்தாரை ஆட்சி செய்யும் 11ஆவது அமீர் அல் தானி ஆவர். கத்தார் அரச குடும்பத்தின் சொத்து மதிப்பு கூ335 பில்லியன் (29 லட்சம் கோடி ரூபாய்) ஆக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

*- 'வண் இந்தியா'*

## "இஸ்ரேலை நாங்க கைப்பற்றுவோம்!" சீறிய எகிப்து

இஸ்ரேல்-பாலஸ்தீன போரில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில், இதேபோன்று அடுத்து ஏதாவது தவறு நடந்தால், இஸ்ரேலை நாங்கள் கைப்பற்றுவோம் என எகிப்து எம்பி முஸ்தபா பக்ரி (Mostafa Bakry) எச்சரித்துள்ளார்.



போர் விஷயத்தில் தற்போது வரை எகிப்து தலையிடவில்லை. ஒருவேளை அப்படி நடந்திருந்தால் அது உலகப்போராக மாறியிருக்கும். இந்நிலையில், இஸ்ரேலுக்கு எகிப்து வெளிப்படையாகவே எச்சரிக்கை விடுத்திருப்பது கவனம் பெற்றிருக்கிறது.

*- 'வண் இந்தியா'*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கல்விமுறை மாற்றங்கள் (சீர்திருத்தங்கள்)

## காலத்தின் கட்டாயத் தேவையாகும்



A.S. யோகராஜா,
கல்வியியலாளர்.
SLTES - I

கல்வி எப்போதுமே அபிவிருத்தியில் மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு பங்கை வகித்து வந்துள்ளது. கல்வியும் மனிதவள விருத்தி யும் சமூக, பொருளாதார மாற்றத்திற்கு இட்டுச் செல்கின்றது. கல்வியானது சந்தேகத்திற்கிட மின்றி, சமூக, பொருளாதார மாற்றத்திற்கும் நெடுங்காலம். நீடித்திருக்கத்தக்க பொருளாதார மாற்றத்திற்குமான மிகவும் சக்திவாய்ந்த கருவிகளில் ஒன்றாகவுள்ளது. எனவே, ஒரு நாட்டின் கல்வி முறையானது காலத்திற்குக் காலம் தேவைக்கேற்ப மாற்றப்பட வேண்டியது அவசியமானதாகும். இவ்வாறு மாற்றமடைவதை கல்விச் சீர்திருத்தம் அல்லது கலைத்திட்ட மறு சீரமைப்பு எனலாம். இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் கல்வி முறைமையில் அவ்வப்போது சிறிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் 1972இலும் 1998 இலும் மிகப்பெரிய அளவிலான கல்வி மறுசீரமைப்புகள் இடம்பெற்றுள்ளன.

**கல்வி சீர்திருத்தம் என்பதன் பொருள்:**

கல்வி சீர்திருத்தம் என்பது கல்வியின் தரம், பொருத்தப்பாடு மற்றும் வினைத்திறன் என்பவற்றை மேம்படுத்துவதற்கு நடைமுறையில் உள்ள கல்வி முறையை (கலைத் திட்டத்தை) மீளாய்வு செய்தல் மற்றும் திருத்தியமைக்கும் செயன்முறையாகும். நாட்டின் கல்விமுறை மாற்றத்தின் இலக்கு, மாணவர் சமூகம் மற்றும் தொழிற்சந்தை ஆகியவற்றில் மாறிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் அதே வேளையில், கல்வி ஆய்வு மற்றும் கற்பித்தல் முறையியலில் (Pedagogy) முன்னேற் றங்களை உருவாக்கும் வகையில் கல்வி முறையை செம்மைப்படுத்தலாமே.

கல்விமுறை மாற்றங்கள் அல்லது சீர்திருத் தங்கள் மிகவும் பொருத்தமானவற்றை உள்ளடக்கி யதாக மற்றும் எதிர்கால சவால்கள் மற்றும் வாய்ப்புகளுக்கு மாணவர்களை ஆயத்தம் செய்யும் திறன் கொண்டதாக மாற்றுவதன் மூலம் அவற்றை மேம்படுத்த முயற்சிக்கின்றது. இவை அறிவாற்றல் மட்டுமல்லாமல் விமர்சன ரீதியாக சிந்திக்கவும் மற்றும் சமூகத்திற்குப் பொருந்தும் விதத்தில் திறன்கொண்ட ஆட்களை உருவாக்கும் நோக்கில் வழிநடத்தப்படுகின்றது.

தற்பொழுது ஆட்சிக் கட்டிலில் ஏறியுள்ள புதிய அரசாங்கம் மாணவர்களின் தேவையற்ற கல்விச் சுமைகளைக் குறைக்க முன்வந்துள் ளமை வரவேற்கத்தக்கதாகும். குறிப்பாக 5 ஆந் தரப் புலமைப் பரிசில் பரீட்சையை நீக்குதல், தரம் 8வரை எந்தவொரு பரீட்சையையும் நடத்தாதிருத்தல் கலைத்திட்டத்தில் எண்ம எழுத்தறிவு (Digital Literacy), படைப்பாற்றல் எழுத்தறிவு (Creative Literacy), தகவல் தொடர்பு (Information Communication), ஒத்துழைப்பு (Collobration) போன்ற 21ம் நூற்றாண்டுக்கான திறன்களைக் கொண்ட மாணவர்களை உரு வாக்க அதிக ஈடுபாடு காட்டவுள்ளதை அறியக் கூடியதாகவுள்ளது.

மேலும் இந்நாட்டின் மக்கள் உற்பத்தி செயன்முறையில் சில விடயங்களில் உள் வாங்கப்படாதிருக்கும் நிலையைமாற்றி அனைவ ரும் உற்பத்தி செயன்முறையின் ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மட்டத்திலும் தொடர்புகொள்ளச் செய்யும் யோசனையும் ஜனாதிபதியின் சிம்மாசன பிரசங்க உரையில் ஒரு முக்கிய விடயமாக முன்வைக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்க தாகும். இந்தவகையில், எமது நாட்டின் துரித பொருளாதார வளர்ச்சியில் தாக்கம் செலுத்தும் கல்விமுறையில் உள்ளடக்கவேண்டிய பின்வரும் முதன்மை விடயங்கள் சில தொடர்பாக அதிக கவனம் செலுத்துவது பயனுடையது.

**புதிய விடயங்களை உள்ளடக்கிய பாடத்திட்டம்:**

இச்செயற்பாடானது பல்வேறு துறைகளிலும் உள்ள புதிய அறிவை உள்ளடக்கியதாகவோ அல்லது காலாவதியான உள்ளடக்கத்தை இற்றைப்படுத்துவதாகவோ அமைதல் வேண் டும். நடைமுறையிலுள்ள எண்ம அறிவு (Digital Knowledge), நிலை பேண்தகு தன்மை (Sustainability) என்பன மாணவரைத் தொழில்நுட்ப உலகிற்கு இட்டுச் செல்வதுடன் கூடுதலாக தனியாள் மயப்படுத்தப்பட்ட இயங்குதன்மை கொண்ட கற்றல் அனுபவங்களுக்குத் தயார் செய்கின்றது.

**கற்பித்தல் முறைகளில்** (Pedagogical Approaches) **மாற்றங்கள் செய்தல்:**

மரபு ரீதியான மனனம் செய்யும் வகுப்ப றைக் கற்றலில் இருந்து விலகி, கூடிய இடைத் தொடர்புகள் கொண்ட விமர்சன சிந்தனை, பிரச்சினை தீர்த்தல் ஒத்துழைப்புடனும் கூட்டாக வும் கற்கின்ற மாணவர் மையக் கற்றல் செயன் முறைக்கு மாறுதல் வேண்டும்.

கல்வியில் சமத்துவமும் (Equality & Equity) நியாயத்தன்மையும் பேணப்படல்:

மாணவர்கள் அவர்களது சமூக, பொரு ளாதாரப் பின்னணி, பால்நிலை, இனம் ஆகிய வேறுபாடின்றி உயர்தரமான கல்வி வாய்ப்புகளைப் பெறுவது உறுதி செய்யப் படுவதுடன் இயலாமையுள்ள பிள்ளைகள், இனச் சிறுபான்மையினர் போன்ற புறக்கணிக்கப்பட்ட குழுவினருக்கான சமகல்வி வாய்ப்புகளை உறுதிப்படுத்தல் வேண்டும். மேலும் பால்நிலை சமத்துவம், உள ஆரோக்கிய விழிப்புணர்வு, சூழல் விழிப்புணர்வும் கரிசனையும் போன்ற சமூகப் பெறுமானங்கள் மற்றும் நியமங்கள் கல்விசார்ந்த முன்னுரிமையில் செல்வாக்குச் செலுத்தும் கலாசார விடயங்களாக உள்ளதனால் பாடசாலைகள் எப்பொழுதும் இத்தகைய பொருத்தமான நியமங்களுக்கு உடன்படுவதுடன் சமூக ரீதியாக பொறுப்புள்ள பிரசைகளை உருவாக்குகின்றது.

எனவே, சூழ்நிலைக்கும் தேவைக்குமேற்ப கல்விமுறைமை மாற்றமடைகின்ற போதிலும், பின்னர் அவை அமுலாக்கப்படும் போது சவால்களையும் தடைகளையும் எதிர்கொள்வது வழமையான நடைமுறையாக உள்ளது.

இவற்றில் ஆசிரியர்கள் அதற்குக் காட்டும் எதிர்ப்பு பலமிகு சவாலாகும். அநேகமான ஆசிரியர்கள் குறிப்பாக நீண்டகாலசேவை அனுபவமுடையோர் இத்தகைய எதிர்ப் புணர்வுடையோராக இருப்பதுடன் மிகவும் நெகிழ்வுடையதும் நுண்ணறிவுடன் சிந்தித்துச் செயலாற்றும் நடைமுறைக்கு மாறுவதற்கு அவர்கள் தயாராக இல்லை. அவை தமது இருப்புக்கு அச்சுறுத்தலாக அவர்கள் கருதுகின் றனர். சிலர் வகுப்பறையில் தமது ஆதிக்கம் வீழ்ச்சியடைந்துவிடும் எனக் கருதுகின்றனர். மேலும் சிலர் புதிய கற்றல் கற்பித்தல் கற்பித் தல் முறைகளைப் பயன்படுத்துவதற்கு தாம் ஏற்ற தகைமை கொண்டவரல்ல என தமக்குத் தாமே ஒரு புலக்காட்சியை உருவாக்கிக் கொள் கின்றனர். இந் நிலைமையிலிருந்து இவர்களை மீட்டெடுப்பதும் கடினமானதொரு பணியாகும்.

கல்விமுறை மாற்றத்தின் மர்மங்கள் அதன் எதிர்வுகூறமுடியாத தன்மை, மனித நடத்தையின் சிக்கலான தன்மை, சமூக, அரசி யல் சூழல் புத்தாக்கத்திற்கும் பழமைக்கும் இடையிலான சமநிலை என்பவற்றில் தங்கி யுள்ளது. இக்காரணிகள் கல்விமுறை மாற்றத்தை (சீர்திருத்தத்தை) சவாலானதாகவும் சுவாரசிய மானதாகவும் மாற்றுகின்றன.

**உசாத்துணை:**


1. தேசிய கல்வி நிறுவகம் (2024) கலைத்திட்ட சீர்திருத் தங்கள், கற்றல் கற்பித்தல் கையேடு B.Ed 2022-2025

2. எம்.கே.எம். மன்சூர் - கல்வித் தத்துவங்கள் 2021, அக்கரைப்பற்று.

3. கற்றல் கற்பித்தல் முறையியல்கள் (2009), பத்தரமுல்ல, கல்வி அமைச்சு SEMP II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொண்டனின் சில நிமிடங்கள்...

- ஆழியோன்





இம்முறை "தொண்டனின் சில நிமிடங்கள்" பகுதிக்காக கிழக்கிலங்கையின் பிரபல ஆளுமை 'ஜெயக்கொடி டேவிட்' அவர்களை சந்தித்தோம். இவர் டேவிட் என்றும் 'பைந்தமிழ்க்குமரன்' என்றும் எம்மால் அறியப்பட்டவர்.

**உங்கள் பிறப்பு மற்றும் இளமைப் பருவம், கல்வி என்பன பற்றிக் கூறுங்களேன்....**



நான் சொறிக்கல்முனைக் கிராமத்தில், யுவான்பிள்ளை கிறகோரி, செபதேயு றோஸ்மேரி தம்பதிகளின் ஐந்தாவது பிள்ளையாக 1963.10.24 அன்று பிறந்தேன். சொறிக்கல்முனை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பெற்றுக்கொண்டேன். கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் உயர்தரம் கற்று பின்னர் போட்டிப் பரீட்சை மூலம் 1988.08.07 அன்று ஆசிரியராக நியமனம் பெற்றுக்கொண்டேன். 1991/1992இல் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விவசாய பாடத்தின் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியரானேன். அத்துடன் தொடர்ந்து படித்து பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைமானிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டேன். பின்னர் வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழியும் இலக்கியமும் துறையில் முதுமாணிப் பட்டமும் பெற்றுக்கொண்டேன். அத்துடன் மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவில் 'மெரிட்' சித்தி பெற்றுக்கொண்டேன்.

**அரச பணி தொடர்பாக உங்களின் வகிபங்கு என்ன?**

ஆரம்பத்தில் சொறிக்கல்முனை திருச்சிலுவை வித்தியாலயத்தில் ஆசிரியராகவும் தொடர்ந்து கடமை நிறைவேற்றி அதிபராகவும் பணியாற்றினேன். பின்னர் சம்மாந்துறை கல்வி வலயத்தில் தமிழ்ப்பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகராக சுமார் பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாக கடமையாற்றினேன். இக்காலகட்டத்தில் தமிழ்பாடத்திலும் பாட இணைச்செயற்பாடுகளிலும் சம்மாந்துறை கல்விவலயம் சிறப்பான அடைவுகளைப் பெற்றுக்கொண்டமையை முன்னிட்டு பெரும் மகிழ்வு அடைகிறேன். தொடர்ந்து அதிபர் சேவைக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து தரம் பெற்ற அதிபராக கல்முனை பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்தில் சுமார் எட்டு வருடங்கள் வழிநடத்தினேன். அதற்காக 2014, 2015, 2016ம் ஆண்டுகளில் கல்வியமைச்சால் வழங்கப்படும், மிகச் சிறந்த அதிபருக்கான 'குரு பிரதீப பிரபா' என்னும் விருதைத் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப்புலத்தில் ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, அதிபராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராக முப்பத்தாறு வருடங்கள் சேவையாற்றி 2023.10.24 அன்று ஓய்வு பெற்றேன்.

**உங்கள் கலை இலக்கியப் பயணம் பற்றிச் சொல்லுங்களேன் ....**

'பைந்தமிழ்க்குமரன்' என்னும் பெயரில் எழுதி வருகின்றேன். மட்டக்களப்பு மறை மாவட்ட சமூகத் தொடர்பு நிலையத்தினால் நடைபெறும் 'உலகத் தொடர்பு தின' விழாவில், முன்னைநாள் ஓய்வு பெற்ற ஆயர் அருட்கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை அவர்களால் பொன்னாடை போர்த்தி, பொற்கிழி வழங்கி கௌரவிக்கப்பட்டேன். அது வருடா வருடம் சிறந்த இலக்கியவாதிக்குக் கிடைக்கும் விருதாகும்.

என்னுடைய முதலாவது சிறுகதைத் தொகுதி, 2015ம் ஆண்டு 'கானல் வசந்தங்கள்' என்னும் பெயரில் வெளிவந்தது. அத் தொகுதிக்கு 2016ல் "கொடகே" சாகித்திய விருது கிடைத்தது.

2017ல் 'மண்மாதா' என்னும் கவிதை நூலை வெளியிட்டேன். இதற்கு பேராசிரியர் மௌனகுரு அவர்கள் அணிந்துரை எழுதியிருந்தார். 2023ல் 'கறையான் தின்ற கனவுகள்' என்னும் சிறுகதைத் தொகுதி ஒன்றை வெளியிடவும் வாய்ப்பு கிடைத்தது.

நானே எழுதி, நெறியாள்கை செய்து, ஒப்பனை, பின்னணி இசை வழங்கி மேடையேற்றிய நாடகமான 'அக்கினி யாத்திரை' 2018ல் தேசிய ரீதியில் முதலாம் இடம்பெற்று பல பரிசுகளைப் பெற்றுக்கொண்டது. 2018.08.25 அன்று மலையகக் கல்வி கலாசார சங்கம், ஏ.பி.ஜே. அப்துல்கலாம் நினைவு விழாவில் "தேசாபிமானி கல்வித்தீபம்" என்னும் விருதைத் தந்தது.

'யாகம்', 'வேள்வி', 'விடியலும் சுடும்', 'கோபுரங்கள்' போன்ற எனது நாடகங்கள் நாட்டின் பல இடங்களிலும் மேடையேற்றப்பட்டன.

**நீங்கள் விளையாட்டுத் துறையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் என்று அறிகின்றோம். அதுபற்றி ....**

நான் ஒரு உதைபந்தாட்ட வீரன். யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்த சங்கத்தில் இணைந்து பயிற்சிபெற்ற உதைபந்தாட்ட நடுவராகவும் உள்ளேன்.

**நீங்கள் இன்னும் பல விருதுகளைப் பெற்றுள்ளதாகவும் அறிகின்றோம். சொல்வீர்களா...?**

ஆம்! கிறிஸ்தவ விவகார அமைச்சும் தேசிய கத்தோலிக்க சமூகத் தொடர்பு மையமும் இணைந்து 2024.08.20 அன்று பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் "தர்மபிரபாஸ்வர" என்னும் வாழ்நாள் சாதனையாளர் விருதை வழங்கி வைத்தனர். கலைத்துறை, ஆக்கத்திறன், நாடகத்துறை மற்றும் படைப்பிலக்கியத் திற்காக அவ்விருது தரப்பட்டது. அத்துடன் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் கிழக்கு மாகாண இலக்கிய விழா 2024ல் "வித்தகர் விருது" என்னும் உயரிய விருது ஒன்றுக்கு நான் தெரிவுசெய்யப்பட்டேன்.

**நீங்கள் செய்த ஆய்வுகள் எவை?**

1. கிழக்கிலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் மருத்துவ மாந்தீகச் சடங்குகள் என்னும் ஆய்வு
2. உமாவரதராஜன் சிறுகதைகளில் சமூகப் பார்வை என்னும் ஆய்வு.
3. பழம் பெரும் கிராமமான சொறிக் கல்முனையின் கல்வி மந்த நிலையும் பின் புலங்களும் என்னும் ஆய்வு.
4. 'சொறிக்கல்முனை திருத்தலம்' என்னும் தலைப்பில் ஒரு வரலாற்றுத் தேடல் ஆவணமாக்கல் ஆய்வு ஒன்றை செய்து வருகின்றேன்.

**உங்கள் கலையார்வத்திற்கு உங்கள் பெற்றோரும் ஒரு காரணம் என்று அறிகிறோம்... அது தொடர்பாக ...**

அம்மா செபதேயு றோஸ்மேரி ஒரு நல்ல வாசகி. சாண்டில்யன், கல்கி போன்றோரின்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நூல்கள் எங்கள் அலுமாரித் தட்டுகளில் பரவிக் கிடக்கும். அப்பா யுவான்பிள்ளை கிறகோரி ஒரு கலைஞர். 'உடக்கு பாஸ்கா' என்னும் கலைவடிவத்தை 50 வருடங்களுக்கும் மேலாக கட்டிக் காத்து வளர்த்து அடுத்தத் தலைமுறையினரிடம் விட்டுச் சென்றவர்.

அவர்களின் கலை ஈர்ப்பு என்னிலும் இயற்கையாக கிளர்ந்தது ஒன்றும் வியப்பில்லைதானே....

**இறுதியாக 'தொண்டன் வாசகர்கட்கு" என்ன சொல்ல விரும்புகிறீர்கள்...?**

சமூகத்தில் வாசிப்புப் பழக்கம் மிகவும் குறைந்துவிட்டது. அத்துடன் எழுதுவதில் ஆர்வமின்மை இளையோரிடம் அதிகம் காணப்படுகின்றது. இவ்விடயம் நிவர்த்தி செய்யப்படல் வேண்டும். இதற்கான ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். வளர்ந்து வரும் இளம் படைப்பாளர்கள் யதார்த்தங்களைப் புரிந்து வைக்கவேண்டும். பொய்யும் புனைவும் அதீத கற்பனைகளும் கால வெள்ளத்தில் நீர்த்துப் போகும். நறுக்குத் தெறித்தாற்போல எள்ளல் நடையில் மனதில் பதியும் வண்ணம் பேசவும் எழுதவும் வேண்டும். உதாரணமாக தொண்டனின் 'கடுகுக் கதை'யைக் கூறலாம்.

மேலும் சமூகத் தொடர்பு நிலையத்தின் பணிகள் சிறக்கவும், தொண்டன் இன்னும் பொலிவு பெறவும், காத்திரமான படைப்புகள் பொறிக்கப்படவும் எனது வாழ்த்துகள்!

இறுதியில் நன்றி கூறி
விடைபெற்றுக்கொண்டோம்.

## விசித்திர உண்மைகள்



- கிரீஸ் நாட்டில் வீடியோ கேம் விளையாட தடை.
- ஆண்களை விட பெண்களுக்கு மோப்ப சக்தி அதிகம்.
- மலேசியாவில் மஞ்சள் ஆடை அணிவது சட்டப்படி குற்றமாகும்.
- காகங்களால் மோசமாக நடத்திய மனிதர்களின் முகத்தை அடையாளம் காண முடியும்.



- 90% சுத்தமான நீர் அண்டார்டிக்காவில் உள்ளது.
- 100 முறை சிரிப்பது 15 நிமிடம் உடற் பயிற்சி செய்வதற்குச் சமம்.
- ஒரு வருடத்தில் 1500 பூகம்பங்களை ஜப்பானியர்கள் சந்திக்கின்றனர்.
- பிரேசில் தலைநகரம் பிரேசிலியாவை வானில் இருந்து பார்க்கும்போது விமானம் போல் இருக்கும்.
- கங்காருவால் பின்நோக்கி நடக்க முடியாது.
- மனித கை ரேகை போல், நாய்களின் மூக்கு ரேகை வேறுபடுமாம்.
- மனித கண்களால் 10 மில்லியன் வண்ணங்களை அறிய முடியும்.
- ஐன்ஸ்டீன் கண்களை நியூயார்க்கில் பாதுகாத்து வைத்துள்ளனர்.
- உங்களால் உறிஞ்சுக்கொண்டே பேச முடியாது. ஏதாவது ஒன்றைத்தான் செய்ய முடியும்.





- 1850ம் ஆண்டு வரை வலது இடது ஷூக்கள் கிடையாது. இரண்டுமே ஒரே மாதிரியானவை.
- சராசரி மனிதன் படுக்கையில் விழுந்த 7 நிமிடங்களில் உறங்கி விடுகிறான்.
- சீன அரசு மல்லிகையைத் தடை செய்துள்ளது.
- பண்டைய கிரேக்கத்தில் ஒலிம்பிக் பந்தயங்களைப் பார்ப்பதற்குக்கூட பெண்களுக்குக் கடும் தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது.



- காதல் வயப்படும் ஜென்ட்டோ பெங்குவின், தன் காதலிக்குப் பரிசளிப்பதற்காக சிறிய கல்லை கடற்கரை முழுவதும் தேடித் தேர்ந்தெடுக்கும்.



- இணையம்







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மனநலம்

## பாதிக்கப்பட்டவரைப் புரிந்துகொளுதல்

A. எபேமியா லூசி ஜோய்ஸ் CR, MS, MTh,
உள ஆன்மீக ஆற்றுப்படுத்துநர்,
மகிழ்ச்சியின் சிகரம் ஆற்றுப்படுத்துதல் மையம், வெள்ளிச்சந்தை.

**மனிதா, நீ நீயாக இரு!**

வாழ்வு என்பது ஒரு கொடை! கொடையாகப் பெறப்பட்ட வாழ்வை ஒவ்வொரு நிமிடமும் கொண்டாடி மகிழ ஒவ்வொரு மனிதரும் அழைக் கப்படுகிறார்.

மனித வாழ்வில் இன்பமும் துன்பமும் நிச்சயம் உண்டு. அவற்றை அவற்றின் உண்மைத் தன்மையோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். இன்ப துன்பங்களுக்கிடையிலும் தமது வாழ்வின் குறிக்கோள் மற்றும் அர்த்தத்தை நுணுக்கமாக உய்த்துணர்ந்து வாழக் கற்றுக்கொண்டவர்கள் மனநலம் படைத்தவர்கள். இவர்களது வாழ்வு சமநிலைப் (homeostasis) பெற்ற நிலையில் காணப்படும். இந்நிலையை அடையாதவர்கள் தங்கள் வாழ்வின் சமநிலையை இழந்து விடுகின் றார்கள். இவர்கள் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் என்று இனம் கண்டுகொள்ளப்படுகின்றனர். வாழ்வின் உண்மைத் தன்மையை ஏற்றுக்கொள்ள இவர்களது மனம் மறுக்கிறது; தனது இருப்பை (existence) ஏற்க மறுக்கிறது. மனநலக் குறைவான இந்நிலை இவர்களை சுயவெறுப்பிற்கு இட்டுச் செல்கிறது. சுயமதிப்புக் குறைவும் தாழ்வு மனமும் ஏற்படுகிறது. பயமும், பதற்றமும், கவலையும், விரக்தியும் மற்றும் மனச் சோர்வும் இவர்களை ஆட்கொள்கின்றன. உடலும் மனமும் பிளவு படுகின்றன. இதனால் செயல்பாடற்ற நிலைக்கு இவர்களது மனம் தள்ளப்படுகிறது. அதன் விளைவு உடலும் செயலற்றுப் போகிறது. மனம் எதைச் சொல்கிறதோ அதையே உடல் செயல் படுத்தும்.

நலம் என்றால் முழுமை என்று பொருள். ஆங்கிலப் பதமாகிய "ஹெல்த்" ற்கு (health) மூலச் சொல் "ஹெல்". முழுமை என்பது இதன் பொருள். நலம் என்பது அகமும் புறமும் இணைந்து செயல்படுதல் ஆகும். தன்னோடும் பிறரோடும், இயற்கையோடும், உலகோடும் மற்றும் இறைவனோடும் இணைந்து அனுசரித்துச் செல்லுதல் நலம் என்று கூறமுடியும். இத்தகைய இணைவுக்கு ஒத்துப்போக முடியாத நிலைக்கு ஒவ்வாமை என்று பொருள். ஒவ்வாமை என்பது ஒரு நோயாக மனிதரில் உருவாகிறது.

மனநலம் என்ற சொல்லுக்கு தெளிவான தோர் உலகளாவிய வரையறை இன்னும் வகுக் கப்படவில்லை. ஆயினும் மனநல உதவியா ளர்கள் "மனநலம்" என்பது ஒரு நேர்முக நிலை எனக் கருதுகிறார்கள். மனநலம் உடையவர்கள் தங்களது வாழ்வைப் பற்றிப் பொறுப்புடைய வர்களாகவும், சுயவிழிப்புடையவர்களாகவும், சுயமாக வாழ்வை நடத்துபவர்களாகவும், மன அழுத்தங்களுக்குத் தங்களை ஆட்படுத்திக் கொள்ளாதவர்களாகவும் மற்றும் தினசரி வாழ்க் கையில் வரும் சிறுசிறு இடையூறுகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையாளத் தெரிந்தவர்களாகவும் திகழ்கிறார்கள். இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமானால் நல்ல சீரான மனநிலையை உடைய ஒரு மனிதர் தன்னுடைய வாழ்க்கையின் அன்றாட நிகழ்வுகளைச் சீராக சம நிலையோடு கொண்டுசெல்ல இயல்பவராக இருப்பார். சீரான மனநிலையைக் கொண்ட ஒருவரால் சமூகத்தில் சிறப்பாகப் பணி செய்ய முடியும். இவரால் நிறைவான வாழ்க்கை வாழ முடியும்.

"தன்னோடும், பிறரோடும், இயற்கையோடும், உலகோடும், இறைவனோடும் எவ்விதத் தடையுமின்றி உறவுகொண்டு வாழ முடிந்தவர்கள் மனநலமுடையவர்கள்"

மனநலம் உடையவர்கள் தினசரி வாழ்வில் ஏற்படும் இன்னல்களை மேற்கொள்ளத் தெரிந்தவர்களாக இருப்பர். உடல், மன மகிழ்ச்சியாக வாழ்வதன் மூலம் தம் வாழ்வைச் சமநிலையில் வைத்துக்கொள்பவர்களாகவும் இருப்பர். தம் வாழ்வின் இலக்கை நோக்கி எதார்த்த வரையறையுடன் பயணிப்பவர்களாகவும், சுயகட்டுப்பாடுடையவர்களகவும் இருப்பர். மேலும், இவர்கள் தேவைக்கேற்பப் பிறரோடு இணைந்து வாழ்ந்தாலும் தன்னுடைய கட்டுப்பாட்டை மீறாதவர்களாகவும் வாழ்வர்.

ஆபிரகாம் மாஸ்லோ (Abraham Maslow) மனநலமுடையோரின் பண்புகளைப் பின்வருமாறு விபரிக்கிறார்:

- நேர்முக எண்ணங்களைக் கொண்டிருப்பவர்களாகவும் தன்னைச் சார்ந்தவர்களுடனும் சுற்றுப்புறச் சூழலிலும் சிறப்பாகப் பழகத் தெரிந்தவர்களாகவும் இருப்பர்.
- சிறந்த தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வர்.
- உண்மை நிலையை உணர்ந்து முடிவுகளை எடுப்பர்.
- பிறரைப் பாராட்டுபவர்களாகவும், வாழ்க்கையை இரசிப்பவர்களாகவும் இருப்பர்.
- சுயமாகச் சிந்தித்துக் காரியங்களைச் செய்வர்.
- சிறப்பாக, ஆக்கபூர்வமாகச் செயல்படுபவர்களாகவும், வித்தியாசமான முறைகளைக் கையாண்டு சீராகச் செய்பவர்களாகவும், பிரச்சினைகளைச் சுமூகமாகக் கையாள்பவர்களாகவும் இருப்பர்.

**மனநலத்தை நிர்ணயிக்கும் காரணி:** முதிர்ந்த ஆளுமை

ஒரு மனிதரை மனநலம் உடையவராகவும், மகிழ்ச்சி மிகுந்தவராகவும், முழுநலமுடையவராகவும் வாழ வழிவகுப்பது அவரது ஆளுமை. அத்தகைய சிறப்புமிகு ஆளுமை எவ்வாறு ஒருவரில் உருவாக்கப்படுகிறது என பார்ப்போம்.

ஆள்+தன்மை = ஆளுமை எனப்படும். பெர்சனாலிட்டி (Personality) என்ற ஆங்கிலச் சொல் "பெர்சோனா (Persona) என்னும் கிரேக்க மொழிச் சொல்லிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. 'persona' என்றால் "முகமூடி" என்பதே அர்த்தம். ஆதிகாலங்களில் கிரேக்க நாட்டில் நாடக மேடைகளில் நாடகம் நடிக்கும் கதாபாத்திரங்கள் தாம் யாரெனப் பிறர் அறிந்துகொள்ளாமல் இருக்க முகமூடிகளை (mask) அணிந்துகொள்வது வழக்கம். முகமூடி என்னும் இச்சொல்லிலிருந்து "பெர்சனாலிட்டி" என்னும் ஆங்கில வார்த்தை வழக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

**ஆளுமை வளர்ச்சி:**

மனித வாழ்வின் வளர்ச்சிக் காலகட்டங்களில் சரியான வளர்ச்சியைப் பெறாத மனிதர்கள் தங்கள் ஆளுமை வளர்ச்சியில் குறைவு ஏற்படுவதன் மூலம் பின்தங்கிய நிலையில் மனநலம் குன்றியவர்களாக வாழ்வின் யதார்த்தங்களை அனுசரித்து அல்லது ஒத்துப்போக இயலாதவர்களாக, உடல், மன நோயாளிகளாக தமக்குள்ளேயே பிளவுபட்டு, போராட்டமான வாழ்வு வாழ்ந்து வருகிறார்கள்.

ஒரு மனிதருடைய ஆளுமை வளர்ச்சி அவரது பாரம்பரிய மரபுப் பண்புகளாலும், பெற்றோரின் மனநிலையாலும், குழந்தை வளர்ப்பு முறையாலும், சுற்றுப்புறச் சூழல்களாலும் நிர்ணயிக்கப்படுகிறது என்பது உளவியலாளர்களின் கருத்து.

மனித வளர்ச்சிக் காலகட்டத்தைப் பற்றி முக்கியமான மூன்று உளவியலாளர்கள் முறையே சிக்மண்ட் பிராய்ட் (Sigmund Freud), எரிக் எரிக்சன் (Eric Erikson), ஜான் பியாஜே (Jean Piaget)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆகியோர் தெளிவாகக் கூறியுள்ளனர். மனித வளர்ச்சி காலகட்டத்தைப் பல காலகட்டங்களாகப் பிரித்தும், தொகுத்தும் விளக்கியுள்ளனர். அக்காலகட்டங்களின் பின்னணியில் ஒரு மனிதரின் ஆளுமை வளர்ச்சி எவ்வாறு உருவாகின்றது என்பதைப் பார்ப்போம்.

முதலாவது காலகட்டம் **(கரு உருவாகும் நேரம்):**

பெற்றோரின் மூன்று அல்லது நான்கு தலைமுறையிலுள்ள மரபுப் பண்புகள் அனைத்தும் கருவிற்குக் கடத்தப்படுகின்றன.

ஒரு மனிதரின் வளர்ச்சியோ, தளர்ச்சியோ அவரது பெற்றோரின் முதற் சேர்க்கையிலேயே நிர்ணயிக்கப்படுகின்றது என்பது உளவியல் கூறும் உண்மை. மகிழ்வான, நிறைவான உடலுறவு (பெற்றோரின் சேர்க்கை) நேரத்தில் உருவான கரு மகிழ்வான வாழ்வைப் பெறுகிறது. கோபம், வெறுப்பு, பகையுணர்வு, குடிவெறி, மோக வெறி, மூடநம்பிக்கையோடு (உடலுறவு) கொண்டு உருவான கரு பாதிப்பான வாழ்வைப் பெறுகிறது. இதுவே ஆளுமை வளர்ச்சியின் அல்லது பாதிப்பின் முதற் கட்டம் ஆகும்.

இரண்டாவது காலகட்டம் **(தாயின் உதரத்தினுள் வளரும் காலம்):**

ஒரு குழந்தை தாயின் உதரத்தினுள் வளரும் காலத்தில் தனது தாயினுடைய அனைத்து எண்ணங்களையும், உணர்வுகளையும், ஏக்கங்களையும், ஆசை ஆர்வங்களையும் தனதாக்கிக் கொள்கின்றது. தாய் உட்கொள்ளும் உணவின் ருசி, மருந்து வகைகளின் சத்துகள் அனைத்தையும் உள்வாங்கிக்கொள்கின்றது. தாய் தனது குழந்தையைத் தொட்டுத் தடவிப் பேசி மகிழ வேண்டும். தாயின் தொடுதல் குழந்தைக்கு மிகவும் மகிழ்ச்சியான அனுபவமாக இருக்கின்றது. தாய் மகிழும்போது குழந்தையும் மகிழ்கின்றது. தாயின் மனவேதனைகள், எண்ணங்கள், ஏக்கங்கள், எதிர்பார்ப்புகள் ஆகிய அனைத்தையும் குழந்தை தனதாக்கிக் கொள்கின்றது. இக்காலகட்டத்தில் தாய் தனது குழந்தையை வேண்டாம் என்று நினைத்திருந்தால் அக் குழந்தை "தான் யாருக்கும் வேண்டாத குழந்தை" என்ற எண்ணத்தைக் கொள்கின்றது. பிற்காலத்தில் இவ்வெண்ணம் பயங்கராமான சூழலுக்கு அக்குழந்தையைத் தள்ளிவிடுகிறது.

மூன்றாவது காலகட்டம் **(தாயின் உதரத்திலிருந்து குழந்தை வெளிவரும் நேரம்):**

மனித வாழ்வின் முதல் கடப்பு நிலையின் நேரமிது. தாயின் உதரத்தினுள் மிகவும் பாதுகாப்பாகவும் எதற்கும் கவலைப்படாது பத்திரமாகவும் இருந்த குழந்தை வெளியுலகக் காற்றைச் சுவாசிக்கும்போது ஏற்படக்கூடிய பயத்தில் அழுகிறது (பாதுகாப்பை இழந்ததாகக் கருதுகிறது). அது தாயின் பிரிவால் ஏற்படுகிறது.

இயற்கையாகவே தாயின் உதரத்திலிருந்து வெளிவரும் குழந்தை உலக நிகழ்ச்சிகளை இயற்கையாகவே ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவத்தை அடைகிறது. அறுவை சிகிச்சை மூலமாக வெளியே எடுக்கப்படும் குழந்தைகளின் மனநிலை அந்நேரம் முதலே பாதிக்கப்படுகிறது என உளவியலாளர்கள் கூறுகின்றனர். மருத்துவரின் உபகரணங்கள் குழந்தையின் மீது படும்போது தனக்கு ஆபத்து என்பதைக் குழந்தை உணர்கிறது. இது குழந்தையின் மனநிலையைப் பாதிப்பதோடு பயவுணர்வுள்ள குழந்தையாக வளரச் செய்கிறது. பிற்காலத்தில் பயமும் சந்தேகமும் கலந்து சந்தேக ஆளுமையுடையவர்களாக மாறிடவும் நேரிடலாம்.

நான்காவது காலகட்டம் **(பிறப்பு முதல் ஒரு வருடம் வரை):**

தாயின் அன்பில், அரவணைப்பில், தந்தையின் பாசத்தில், குடும்பத்தாரின் தொட்டுத் தழுவுதலில், முத்தமிடுதலில், பாதுகாப்பில் வளரும் காலம். பெற்றோரையும் குடும்பத்தாரையும் முழுமையாக நம்பும் காலம்.

– தொடரும்......

*"ஏழைகள் மீது இரக்கம் கொண்டு
அவர்களுக்கு உதவி செய்பவன்
பகலெல்லாம் நோன்பு நோற்று - இரவு
முழுவதும் இறைவனைத் தொழுபவனை
விட உயர்ந்தவன்".*



**- நபிகள் நாயகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கிறிஸ்தவம்

க.பொ.த. உயர்தரம்

# மாணவர் பக்கம்

மாதிரி வினாத்தாள் - பகுதி - 1

- நில்மினி கஜேந்திரன்

தொடர் XXIX

**மாணவர் பக்கம்**

டிசம்பர் – 2024

விடைகள்

| | | |
|---|---|---|
| 1) 2 | 5) 2 | 9) 3 |
| 2) 1 | 6) 2 | 10) 4 |
| 3) 2 | 7) 2 | |
| 4) 1 | 8) 2 | |

**1. இயுத்திக்கேயரின் கருத்து ஒரு பேதகம் என எடுத்துக்காட்டிய ஆயர்:**

1. தூய அத்தனாசியார் 2. தூய சிறில் 3. தூய ஒரிஜன்
4. தூய பிலேவியன் 5. தூய எவ்சேபியாஸ்

**2. ஆண்டவரின் இறுதி இராவுணவு 'தனி நினைவுகூரல் மட்டுமே' எனக் கூறியவர்:**

1. மாட்டின் லூதர் 2. ஜோன் கல்வின் 3. சுவிங்லி
4. தோமஸ் மூர் 5. ஜோன்பொஸ்கோ

**3. மனிதனின் உன்னதத் தன்மை நிலைத்திருப்பது அவனுக்கே தனித்துவமான மனச்சான்றிலாகும் என மனிதனின் மாண்பினைப் பற்றிக் குறிப்பிடுவது.**

1. கத்தோலிக்கத் திருச்சபை மறைக்கல்வி 2. கத்தோலிக்கத் திருச்சபைப் பெரிய குறிப்பிடம்
3. இன்றைய உலகில் திருச்சபை வெளியீடு 4. கிறிஸ்தவ திருச்சபை ஒன்றிப்பு மடல்
5. அவனியில் அமைதி சுற்றுமடல்

**4. திருச்சபை வரலாற்றில் கி.பி. 325ல் முதலாவதாக நடந்தேறிய திருச்சங்கம்:**

1. கல்சிடோன் 2. எபேசு 3. நிசேயா
4. 1ம் வத்திக்கான் சங்கம் 5. கொன்ஸ்தாந்திநோபிள்

**5. இலத்தீன் பண்பாட்டின் இதயமாகக் கருதப்படும் நகர்:**

1. யூதேயா 2. எபேசு 3. எருசலேம் 4. தர்சு 5. பிலிப்பி

**6. திருச்சங்கம் ஒன்றிற்காக அழைப்பு விடுத்தல், நடாத்துதல், அனுமதி வழங்குதல் என்பனவற்றை முக்கியப் பணியாகக் கொண்டோர்:**

1. பிதாப்பிதாக்கள் 2. இறைவாக்கினர் 3. ஆயர்
4. திருத்தொண்டர் 5. உரோமை ஆளுநர்

**7. முதலாவது சிலுவைப் போருக்குத் தலைமை தாங்கிய திருத்தந்தை:**

1. திருத்தந்தை XIம் சின்னப்பர் 2. திருத்தந்தை IIம் ஊர்பன்
3. திருத்தந்தை XIIம் பத்திநாதர் 4. திருத்தந்தை IIம் ஜோண் போல்
5. திருத்தந்தை XIIம் சிங்கராயர்

**8. போர்த்துக்கல்லும் ஸ்பெயினும் தாம் கைப்பற்றிய நாடுகளில் கிறிஸ்தவ மறையைப் பரப்புவதற்கு திருச்சபையினால் அனுமதி வழங்கி செய்துகொள்ளப்பட்ட திட்டம்:**

1. மதச் சட்டம் 2. மக்னா காட்டாச் சட்டம் 3. லீமா ஆவணம்
4. பத்றோ ஆடோ திட்டம் 5. அரசியல் சட்டம்

**9. மரியாவின் பக்திக்கு வலுச் சேர்த்த பொதுச்சங்கம்?**

1. கல்சிடோன் சங்கம் 2. எபேசு பொதுச்சங்கம் 3. திரித்தெந்தீன் சங்கம்
4. நிசேயா சங்கம் 5. கொன்ஸ்தாந்தின் சங்கம்

**10. 'அப்போலோஜியா" எனும் கிரேக்கச் சொல்லின் அர்த்தம்:**

1. மீட்பு 2. பாதுகாப்பது 3. கடத்தல் 4. ஒன்றிணைத்தல் 5. சமாதானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அநுர அரசின் வரவு செலவுத்திட்டம் பாராளுமன்றம் வந்துவிட்டது. அது அங்கு விவாதங்களின் பின் நிறைவேற்றப்பட்டுவிடும். ஏனெனில் மிகப் பெரும் அறுதிப் பெரும்பான்மை அரசுக்குண்டு. வடக்கு மாகாண மக்களுக்குபாரிய நிதி ஒதுக்கீடுகள் உண்டு. ஆனால் அம்மாகாணத்துக்குள்ளேயே ஒரு சில மாவட்டங்கள் பின் தள்ளப்படும் அபாயம் உண்டு. கிழக்கு மாகாணம் பற்றி வாய் திறக்கப்படவில்லை என்றே குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கனவே கொடுக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படிகள் அடிப்படைச் சம்பளத்தடன் இணைப்படுவதனால் ஆரம்பகால கட்டங்களில் சம்பள அதிகரிப்பு பெருமெடுப்பில் அதிகரிக்கப்பட வாய்ப்பு இல்லை: சில நூறு ரூபா அதிகரிப்புத்தான் ஏற்படும் என்று அரசாங்க அதிகாரியொருவர் ஆதங்கப்பட்டார். ஓய்வூதியம் பெறுபவர்களின் நிலைமையும் சங்கடம்தான். ரூபா மூவாயிரம் கொடுப்பனவு ஏற்கனவே கொடுக்கப்பட்டுவிட்டதால், பாதீட்டில் அவர்கள் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. ஆனால் 2020ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள். 2021ம் ஆண்டு நடுப்பகுதியில் ஆசிரியர் அதிபர் சேவையில் உள்ளவர்கட்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டது. அவ்வாண்டு ஆரம்பப் பகுதியில் ஓய்வு பெற்றவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை: ஓய்வூதியத்திலும் மாற்றம் இல்லை. சுமார் இருபதாயிரம் ரூபா இழப்பு என சம்பந்தப்பட்டவர்கள் கவலை தெரிவித்தார்கள்.

நெல் அறுவடை இறுதிக்கட்டத்தை நெருங்கிக் கொண்டிருப்பதாக சின்னவன் போடியார் தெரிவிக்கின்றார். அறுவடை செய்யப்படும் நெல்லுக்கு உத்தரவாத விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் முதல் அறுவடை கிழக்கு மாகாணத்திலேயே ஆரம்பிக்கப்படுவதுண்டு. அதிலும் அம்பாறை மாவட்டத்தில்தான்அதிகம் வெட்டு நடக்கும். கிழக்கு மாகாண அறுவடை கணிசமான அளவு இடம்பெற்று முடிந்த பின்னரே நெல்லுக்கு உத்தரவாத விலை வழங்கப்பட்டது. அதனால் அம்மாகாண விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண நூலகத்திற்கு 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது; அது மிகவும் வரவேற்கப்படத்தக்கது. பிராயச்சித்தம் செய்கிறார்கள் போலும். அந்நூலகம் எரிக்கப்பட்டபோது யாழ்ப்பாணத்தில், அக்காலத்தய பிரபல பெரும்பான்மையின அரசியல்வாதிகள் நின்றதாக நாம் அறிந்திருந்தோம். அப்போதைய இளம் அரசியல்வாதி ஒருவரும் அங்கிருந்ததாக அரசல் புரசலாக செய்திகள் உலவுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ட்ரம்ப், அமெரிக்காவின் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றபின் சில அதிரடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சட்டவிரோதமாகவும், உல்லாசப் பயண விசாவில் தங்கி நின்று தொழில் புரியும் பிறநாட்டவர்களை நாடுகடத்தும் செயற்பாடு கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதிலும் இந்தியர்கள் கைவிலங்கிடப்பட்டு நாடுகடத்தப்படுகின்றனர். இவ்வாறே பிரித்தானியாவும் பல தொழில் நிறுவனங்களிலும் சுற்றிவளைப்புகள் மேற்கொண்டு சட்டவிரோதமாக நிற்பவர்களை நாடுகடத்துவதாகத் தெரியவருகின்றது.

இனி இலங்கையில் உள்ளூராட்சித் திருவிழா ஆரம்பிக்கப்படவுள்ளது. அதற்கு ஏதுவான சட்டங் கள் பாராளுமன்றத்தில் எதிர்ப்பின்றி நிறைவேற்றப் பட்டுள்ளன. இதன்படி முன்னர் செலுத்தப்பட்ட கட்டுப்பணம் மீளவும் வழங்கப்படவுள்ளது; அதன் பின்னரே தேர்தல் நியமனப் பத்திரங்கள் கோரப் படும் எனத் தெரியவருகின்றது. ஏற்கனவே நியமனப்பத்திரம் தாக்கல் செய்திருந்த நூறு பேர் தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

ரணில் - சஜித் கூட்டு ஏற்படும் சாத்தியம் வலுவிழந்து சென்றுவிட்டது. 43 பாராளுமன்ற உறுப்பினர்கள் (முன்னாள்) பெற்றுக்கொண்ட நட்டஈட்டு விவகாரம் இவ்வாறான நிலைமையை தோற்றுவித்துள்ளது.

உள்ளூராட்சி தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக்கட்சி தனித்துப் போட்டியிடவுள்ளதாக தெரியவருகின்றது. மக்கள் ஆதரவுத் தளம் அவர்களுக்கு இருப்பதாக, பொதுத் தேர்தல் காட்டுவதாக அன்னக்கிளி ஆச்சி சொல்கிறார். இப்போதைய அரசு, தமிழ் மக்களுக்கு இனப் பிரச்சினை, அரசியல் பிரச்சினை இருப்பதாக காட்டிக் கொள்ளவும் இல்லை; உணர்ந்துகொள்ளவும் இல்லை என்றும் ஆச்சி ஆதங்கப்படுகின்றார்.



கடந்த 1 வருடம்
இரண்டு மாதங்கள்
சமூகத் தொடர்பு நிலையத்தின்
இயக்குநராகப் பணியாற்றிய
அருட்தந்தை அருட்கலாநிதி
**பிறைனர் செலர்** அவர்கள் தமது பணிக்காலத்தை
நிறைவுசெய்து கொண்டார். இதுவரை காலமும்
எம்மை வழிநடத்தி திறம்படச் செயற்பட்ட
எமது இயக்குநர் அவர்களை
வாழ்த்துவதுடன். இறைவன் அவரை
ஆசீர்வதித்து அவருக்கு வேண்டிய
மன உறுதியையும் ஆரோக்கியத்தையும்
அளித்திட வேண்டுகிறோம்.



2025.02.21 முதல்
சமூகத் தொடர்பு நிலையத்தின்
புதிய இயக்குநராகப்
பொறுப்பேற்றுள்ள
அருட்தந்தை C.V. **அன்னதாஸ்**
அவர்களை
வாழ்த்தி வரவேற்பதோடு,
அவர் தமது பணியைச் சிறப்புற நிறைவேற்ற
அவருக்கு வேண்டிய உடல் பலத்தையும்
ஆன்ம பலத்தையும் இறைவன் வழங்கிட
வேண்டுகின்றோம்.

***– சமூகத் தொடர்பு நிலைய அலுவலர்கள் மற்றும் 'தொண்டன்' குழுவினர் –***

### வித்தியாசமான சவாலை எதிர்கொள்ளும் நாடு!



பிலிப்பைன்ஸ் மண்டலியோங் நகருக்கு உட்பட்ட அடிஷன் மலைக் கிராமத்தில். கடந்த 2 மாதங்களில் 42 பேர் டெங்குவால் பாதிக்கப்பட்டுள்ள னர். மேலும் டெங்கு பாதித்த 2 மாணவர்கள் உயிரிழந்தது அந்நாட்டை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்நிலையில், டெங்கு பரவலைக் கட்டுப்படுத்த எண்ணிய கிராமத்தலைவர், ஒரு நூதன முயற்சியை முன்னெடுத்தார். அதாவது, 5 கொசுக்களை, உயிருடனோ, கொல்லப்பட்ட நிலையிலோ பிடித்துக் கொடுத்தால், இந்திய ரூபாய் மதிப்பில் ஒரு ரூபாய் 50 காசுகள் வழங்கப்படும் என்று அறிவித்தார்.இதனால், உற்சாகம் அடைந்த உள்ளூர் மக்கள், கொத்துக் கொத்தாக கொசுக்களைப் பிடித்துக் கொண்டு, பணம் பெறுவதற்கு படையெடுக்கத் தொடங்கினர்.

ஆனால் இந்த அறிவிப்பால் பெரிய சிக்கல் ஒன்றும் உருவாகியுள்ளது. பலர் வீட்டிலேயே கொசுவை வளர்த்து, காசு பார்க்க ஆசைப்படுவதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஆக, டெங்குவை ஒழிக்க மேற்கொண்ட முன்னெடுப்பு, மூட்டைப்பூச்சிக்கு பயந்து வீட்டைக் கொளுத்திய கதையாக மாறி விட்டது.

NEWS 18



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## வினாவிடைப் போட்டி இலக்கம் - 59

போட்டிக்கான பரிசுகள் அனுசரணை: திரு. லெஸ்லிராஜ் : ஜே.ஜே. சுப்பர் மார்க்கட்
மெயின் வீதி, தன்னாமுனை. 0779780151

*முதலில் வரும் ஐந்து வினாக்களும் தொடக்கநூல் :1-15 வரையான அதிகாரங்களில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன.*

1) கடவுள் மானிடருக்கு ஆசி வழங்கிக் கூறியதென்ன? ..........

2) தொடக்கநூல் எதனை வலியுறுத்துகின்றது? ..........

3) பாபேல் கோபுரம் கட்டுவதற்கு மக்கள் ஏன் முடிவுசெய்தனர்? ..........

4) கதிரவன் மறைந்து இருள் படர்ந்த பின்னர் ஆபிரகாமுடன் கடவுள் செய்துகொண்ட உடன்படிக்கை என்ன? ..........

5) ஏதேன் தோட்டத்திலிருந்து பிரிந்து செல்லும் நான்கு சிறப்புமிகு ஆறுகளின் பெயர்களைக் குறிப்பிடுக: ..........

6) 2024ம் ஆண்டிற்கான மருத்துவத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்கள் யார்? எந்நாட்டைச் சேர்ந்தவர்கள்? ..........

7) கவிஞரும் எழுத்தாளருமான நா. முத்துக்குமார் எழுதிய ஐந்து நூல்களைக் குறிப்பிடுக: ..........

8) "அறியாத தெய்வத்திற்கு" என எழுதப்பட்டிருக்கும் பலிப்பீடம் எங்கு அமைந்துள்ளது? ..........

9) திருவழிப்பாட்டின் உத்தியோகப்பூர்வ மொழி எது? ..........

10) நிக்கோலாஸ் கோப்பனிக்கஸ் எங்கு, எப்போது பிறந்தார்? ..........

பெயர் : ..........

முகவரி : ..........

..........

பங்கு : ..........

தொ.பே.இல: ..........

அனுப்பவேண்டிய முகவரி :

**வினாவிடைப் போட்டி - 59**
**'தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

**முடிவுத் திகதி : 31.04.2025**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# திருஅவைச் செய்திகள்!

## வத்திக்கான் நகர நிர்வாகத் தலைவராக அருள்சகோதரி

வத்திக்கான் நகர உயர்மட்ட நிர்வாகத்தின் பொதுச் செயலராக பணியாற்றிக் கொண்டிருக்கும் அருள்சகோதரி Raffaella Petrini அவர்கள், மார்ச் மாதம் 1ம திகதி முதல் வத்திக்கான் நகர நிர்வாகத்துறையின் தலைவராகப் பொறுப்பேற்க இருக்கின்றார் என்று திருப்பீடச் செய்தித் தொடர்பகம் அறிவித்துள்ளது.

வத்திக்கான் நகர மாநிலத்திற்கான திருப்பீட ஆணையத்தின் தலைவராகவும் நகர நிர்வாகத்துறையின் தலைவ்ராகவும் பொறுப்பேற்க உள்ள Raffaella Petrini அவர்கள், வத்திக்கான் நிர்வாகப் பதவியை வகிக்கும் முதல் அருள் சகோதரி என்ற பெருமைக்குரியவர்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பணிக்காலத்தில், அர்ப்பண வாழ்வுக்கான திருப்பீடத்துறையின் தலைவராக அருள்சகோதரி Simona Brambilla அவர்கள் நியமிக்கப் பட்டார். அவரைத் தொடர்ந்து வத்திக்கான் நகர நிர்வாகத் தலைவராக அருள்சகோதரி Raffaella Petrini அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளது வரலாற்றிலேயே முதன் முறையாகும்.

மேலும் கடந்த ஆண்டுகளில், Francesca di Giovanni, Nathalie Becquart, Alessandra Smerilli என்னும் அருள்சகோதரிகளும், Barbara Jatta, Nataša Govekar, Cristiane Murray ஆகிய பெண் பொது நிலையினரும் திருஅவையைச் சார்ந்த பல்வேறு பொறுப்புகளில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் பணி அமர்த்தப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 2025 ஆம் ஆண்டுக்கான மனித உடன்பிறந்த நிலை சையத் விருது

மனித உடன்பிறந்த உணர்வு நிலை குறித்த வரலாற்று சிறப்பு வாய்ந்த ஏடு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கும் Al-Azhar தலைமைக் குருவுக்கும் இடையே 2019ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி கையெழுத்திடப்பட்டதை கௌரவிக்கும் விதமாக உருவாக்கப்பட்ட மனித உடன்பிறந்த நிலை சையத் விருது, தற்போது அதன் ஆறாவது ஆண்டாக ஜனவரி 31ம் திகதி வியாழனன்று அபுதாபியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

World Central Kitchen எனப்படும் அரசு சாரா அமைப்பு, கரீபியன் நாட்டின் Barbados பிரதமர் Mia Mottley, எத்தியோப்பியா ஸ்ரீ அமெரிக்காவைச் சார்ந்த 15 வயது நிரம்பிய Heman Bekele ஆகியோருக்கு 2025ஆம் ஆண்டிற்கான சையத் விருது வழங்கப் பட உள்ளது. ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக் கப்பட்ட பன்னாட்டு மனித உடன்பிறந்த நிலை நாளை முன்னிட்டு பெப்ரவரி 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அபுதாபியில் நடைபெறும் விழாவில் இந்த விருது வழங்கப்படும்.

World Central Kitchen எனப்படும் அரசு சாரா அமைப்பானது ஹெய்ட்டியில் உருவானது, 2024 ஆம் ஆண்டில், 20 நாடுகளில் மோதல்கள், இயற்கை பேரழிவுகள் மற்றும் காலநிலை நெருக்கடியால் பாதிக் கப்பட்ட குடும்பங்களுக்கு அதாவது WCK அமைப் பானது 10 கோடியே 90 இலட்சத்திற்கும் அதிகமான உணவுகளை வழங்கியது. மனிதாபிமான நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு உதவி வழங்குவதில் சிறப்பு பெற்ற World Central Kitchen என்னும் அமைப்பானது 2010 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. ஏறக்குறைய 30 நாடுகளில் 3 கோடிக்கும் அதிகமான உணவுகளை வழங்கியுள்ளது, இதில் 2023ஆம் ஆண்டு அக்டோபரில் இஸ்ரயேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே போர் வெடித்ததிலிருந்து காசாவில் உள்ள பாலஸ்தீனியர்களுக்கு வழங்கிய 1 கோடி உணவுகளும் இதில் அடங்கும்.

## பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவாகக் களமிறங்கும் யூதக்குருக்கள்

காசாவிலிருந்து பாலஸ்தீனியர்களை அகற்றும் அரசுத்தலைவர் டிரம்பின் முயற்சிகளை தாங்கள் எதிர்ப்பதாக பிப்ரவரி 13, வியாழனன்று அறிக்கை ஒன்றை வெளியிட்ட அமெரிக்க ஐக்கிய நாட்டின் 350 யூதமதத் தலைவர்கள், ஓர் இனத்தையே ஒரு பகுதியிலிருந்து முற்றிலுமாக வெளியேற்ற முயல்வது ஒழுக்க ரீதிகளுக்கு எதிரானது எனவும், யூதர்கள் இதற்கு தங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பதாகவும் கூறியுள்ளனர்.

அதிபர் டிரம்பின் பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது என்பதை உலகமே அறியும் எனக்கூறும் யூத மதத்தலைவர்கள், பாலஸ்தீனியர்களை அவர்களின் சொந்த இடங்களில் இருந்து அகற்றி அவர்களின் இடங்களைக் கைப்பற்றி இலாபம் பார்க்க முயல்வது நன்னெறிக் கொள்கைகளுக்கு எதிரானது எனவும் கூறியுள்ளனர்.

பாலஸ்தீனியர்கள் தங்கள் சொந்த இடங்களில் பாதுகாப்புடனும், மாண்புடனும், சுயமாக முடிவெடுக்கும் உறுதியுடனும் வாழ்வதற்கு உதவும் நிறுவனங்களுக்கு நிதியுதவி ஆற்றும் நோக்கத்துடன் 1 கோடி டாலர்களை திரட்ட உள்ளதாகவும் அமெரிக்கா வாழ் யூத குருக்களும் ஏனைய தலைவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வினாவிடைப் போட்டி - 57 விடைகள்

1. சீனார் நாட்டிலே அதற்கொரு கோவில் கட்டுவதற்கும், அங்கே கோவில் எழுப்பி, 'மரக்காலை' அதற்குரிய மேடையில் நிலைநிறுத்துவதற்கும் கொண்டு சென்றார்கள்.

2. * ஒவ்வொருவருடைய சதையும் அழுகிப் போகும்.
   * அவர்களுடைய கண்கள் தம் குழிகளிலேயே அழுகிப் போகும்.
   * நாக்குகளும் வாய்க்குள்ளேயே அழுகிவிடும்.

3. **நான்கு கொம்புகள் :** இவைதாம் யூதாவையும், இஸ்ர யேலையும், எருசலேமையும் சிதைவடைத்த கொம்புகள்.

   **நான்கு கொல்லர்கள்:** எவரும் தலையெடுக்காதபடி தங் கள் கொம்புகளை உயர்த்தி வேற்றினத்தாரின் கொம்பு களை உடைத்தெறியவும், அவர்களைத் திகில் அடையச் செய்யவுமே இவை வந்திருக்கின்றனர்.

4. இவை அனைத்துலகின் ஆண்டவர் திருமுன் நிகழ்கின்ற திருநிலைப்படுத்தப்பட்ட இருவரை குறிக்கின்றன.

5. எருசலேமின் மீட்பு, கோவில் மீண்டும் கட்டியெழுப்பப் படும் என்ற வாக்குறுதி, இறைமக்கள் தூய்மைப்படுத்தப் படுவர் என்ற அறிவிப்பு, மெசியாவின் வருங்கால ஆட்சி.

6. விண்ணகத் தந்தையின் எல்லையற்ற இரக்கம் நற்செய் திப் பணியில் மிக முக்கியமானவரான தூயஆவியார், மீட்பராகிய இறைமகன்.

7. பாதுகாப்பு

8. உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம், சிறார் நிறுவனம், விவசாய மேம்பாட்டுக்கான அனைத்துலக நிறுவனம், உலக உணவு திட்ட நிறுவனம், உலக நல நிறுவனம்.

9. Enzo Bianchi

10. வாழ்வதற்கும் முன்னேறுவதற்கும் உரிமை, பிறப்பின் போது பெயரொன்றையும் இன அடையாளத்தையும் பெற்றுக்கொள்ளும் உரிமை, பெற்றோரிடமிருந்து தம்மை தனிமைப்படுத்தப்படாதிருப்பதற்கான உரிமை, கருத்தை வெளிப்படுத்தும் உரிமை.

### சரியான விடைகளை எழுதி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

**முதலாம் பரிசு: 1000/=**
கலா ராஜன்,
பாரதி வீதி,
தன்னாமுனை.

**இரண்டாம் பரிசு: 700/=**
இ. பத்மா மேரி,
133A, அம்மன் கோவில் வீதி,
கல்முனை - 01.

**மூன்றாம் பரிசு: 500/=**
கோபால் பூமணி,
இராமகிருஸ்ணா வீதி,
திருக்கோவில் - 03.

போட்டியில் பங்குகொண்டோர் - 05 பேர். அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)



## கடற்பாசி மூலம் தயாரிக்கப்படும் உள்ளாடைகள்

**மார்பக புற்றுநோய் பாதித்த பெண்களுக்கு உதவுவது எப்படி?**

இலண்டனைச் சேர்ந்த அலெக்சான்டர் பெர்ரியின் நிறுவனம் தயாரிக்கும் மென்மை யான, சுற்றுச்சூழலுக்கு ஏற்ற, கடற் பாசியால் செய்யப்பட்ட உள்ளாடை கள் உடல்ரீதியிலான சிக்கல்க ளைச் சந்திக்கும் பெண்களுக்கு பெரும் ஆறுதல் அளிக்கிறது.

"இது உண்மையான அர்ப்பணிப் பின் மூலம் உருவான ஆடை. பயோகெமிஸ்ட்ரி படித்திருந்தாலும் எனக்கு பேஷன் துறை மீது ஆர்வம் அதிகம்." என்கிறார் அலெக்சான்டர் பெர்ரி.

இவரின் அலெக்சாண்டர் கிளெமென்டைன் நிறுவனம் கடற்பாசி மற்றும் தாவரங்களைப் பயன்படுத்தி உள்ளாடைகள் தயாரிக்கிறது.

இதற்காக கடற்பாசி சேகரிக்கப் பட்டு உலர்த்தப்படுகிறது, அது பிறகு தூளாக மாற்றப்படும். இது யூகலிப்டஸ் செல்லுலோஸ் உடன் கலக்கப்படுகிறது. பிறகு இழையாக நூற்கப்படுகிறது. அதன் பின்னர் துணியில் நெய்யப்படுகிறது.

இந்நிறுவனத்தின் நோக்கம் குறித்து பேசும் அலெக்ஸ், "தொடக்கத்தில், இதை சுற்றுச்சூழலுக்கு ஏற்ற ஒரு பேஷன் பிராண்டாக உருவாக்கினோம். பின்னர் எங்களுக்கு சில மதிப்புரை கள் கிடைத்தன. மெனோபாஸ், பெரிமெனோபாஸ், மார்பக புற்று நோய், நரம்பு பிரச்சினை, அக்கி பாதிப்பு போன்ற சிக்கல்களை எதிர்கொள்ளும் பெண்களின் மதிப்புரைகள்."

"இந்த உள்ளாடைகள் எப்படி தங்களுக்கு மிகப்பெரிய ஆறுதலை அளித்தன என்பதை அவர்கள் கூறினார்கள். இதை பெண்களின் ஆரோக்கியத்தில் கவனம் செலுத் தும் நிறுவனமாக மாற்ற வேண்டும் என்று அந்தக் கட்டத்தில்தான் நான் முடிவு செய்தேன்" என்கிறார்.


BBC NEWS




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 186 முடிவுகள்

**போட்டியில் பங்குபற்றிய மாணவர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுகள்....**







## நானா ஞானி....?



ஜப்பானிய செல்வந்தர் ஒருவர் சம்பந்தப்பட்ட விழாவுக்கு ஜென் ஞானி காசன் அழைக்கப் பட்டிருந்தார். இதற்கு முன் இப்படியொரு ஆடம்பர விழாவில் அவர் கலந்து கொண்டதில்லை. எனவே, அவருக்கு உடல் நடுக்கம் ஏற்பட்டது. வியர்த்து கொட்டியது. இந்நிகழ்ச்சிக்குப் பின் காசன் தன் மாணவர்களை அழைத்தார்.


"என்னை மன்னித்து விடுங்கள். நான் உங்களுக்கு ஆசிரியராக இருக்கத் தகுதியற்றவன். உலகத்தில் ஏற்படும் பிரபலத்தை சமமாகப் பாவிக்க முடியாத மனநிலையில் தற்போது இருக்கிறேன். நீங்கள் வேறு ஆசிரியரிடம் சென்று பயிலுங்கள்" என்று கூறி விடை பெற்றார்.

பின்னர், ஒரு கோயிலில் சென்று தனிமையில் தியானம் செய்தார். வேறு ஓர் ஆசிரியரிடம் மாணவராகச் சேர்ந்து பயின்றார். எட்டு ஆண்டுகளுக்குப் பின் காசன் ஞானம் அடைந்தவராக புதிய மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**2025 யூபிலி ஆண்டு மட்டக்களப்பு மறைமாவட்ட புனித மரியன்னை பேராலயத்தில் புனித கதவு திறந்து வைக்கப்பட்டது.**









**புதிய பங்கு மனைக்கான அடிக்கல் நடும் விழாவும் முதல் நற்கருணை, உறுதிப்பூசுதல் ஆகிய அருட்சாதனஙகளை வழங்கும் நிகழ்வும் -பெரிய உப்போடை**









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org